பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்

(களனி பல்கலைக்கழகம்)

# ஆண்டறிக்கை
# 2017



**தொலைநோக்கு**

பாளி, பௌத்த கல்விக்கான உலகின் சிறந்த பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி நிறுவனமொன்றாதல்

**செயற்பணி**

பாளி, பௌத்த கல்வித்துறையில் அறிவு, கருத்து மற்றும் ஆராய்ச்சி முதலியவற்றின் ஆற்றல் அபிவிருத்திக்காக கல்வியாளர்களுக்கு சிறந்த வாய்ப்புக்களையும் வசதிகளையும் உருவாக்கிக் கொடுக்கும் முன்னோடியாகச் செயலாற்றுதல்.

**பணிப்பாளர் தேரோ அவர்களின் செய்தி**



களனி பல்கலைக்கழகத்தின் பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனமானது முப்பத்தைந்து வருட காலம் பாளி மற்றும் பௌத்த கல்வி துறை தொடர்பில் கற்கும் பட்டதாரிகள் சார்பில் கற்கை வசதிகளை வழங்கும் இலங்கையின் முதன்மை நிறுவனமொன்றாகும்.

மிக குறைந்த வசதிகளின் கீழ் இயங்கிக் கொண்டிருந்த இந்த நிறுவனமானது நான் பணிப்பாளர் பதவிக்கான கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் வசதிகளுடன்கூடிய தற்போதைய கட்டடத்தை தாபித்து புதிய பாதையின் ஊடாக கல்வி திட்டங்களை நடைமுறைப்படுத்துவற்கு முயற்சியெடுத்துள்ளேன். கல்வித் துறையிலும் அதேபோன்று நிருவாக, கல்விசாரா மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை அபிவிருத்தி செய்யும் பொறுப்பினையும் நன்கு கருத்திற் கொணடதோடு, சகல தரப்பினர்களினதும் ஒத்துழைப்புடன் சிறப்பான செயற்பாட்டை நோக்கிய பயணத்தையும் ஆரம்பித்தேன்.

இந்த முயற்சி வெற்றி கொள்ளப்பட்டு தற்போது உள்நாட்டு வெளிநாட்டு மாணவ சமூகத்திற்கு பௌத்த கல்வி துறையின் கல்வி வசதிகளை வழங்கி இலங்கையில் ஆகக்கூடதலான வெளிநாட்டு மாணவர்களுக்கு பௌத்த கல்வித் துறையில் கற்கும் பங்களிப்பினை வழங்கும் நிறுவனமொன்றாக மாற்றுவதற்கு கிடைத்த வாய்ப்பு மகிழ்ச்சிகரமான விடயமொன்றாகும். கல்வி, சமூக மற்றும் கலாசார பணி போன்றவற்றை உள்நாட்டில் பூர்ததி செய்வதற்கு பங்களிப்பு வழங்கி தேரவாதி மரபுரிமை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உலகின் முதன்மை பட்டப்பின்படிப்பு நிறுவனமொன்றாக இந்த நிறுவனம் செயற்படுவதனை பெருமையாக கருதுகின்றேன்.

இந்த நிறுவனத்தில் கல்வி கற்ற உள்நாட்டு வெளிநாட்டு பட்டதாரிகள் சிறந்த சிந்தனை கொண்ட தேசிய மற்றும் சருவதேச பணிகளில் ஈடுபட்டு பௌத்த தர்மத்தின் தலைசிறந்த நற்பெயரை உலகம் முழுவதும் பரப்புவதற்கு அவர்களுடைய பரந்துபட்ட பங்களிப்பினை வழங்குகின்றனர். அதேபோன்று இலங்கையிலிருந்து வழங்கக்கூடிய உன்னதமிக்க பங்களிப்பாக தேவராதி பௌத்த தர்மத்தை உலகிற்கு வழங்கி சிங்கப்பூர், ஹொங்கொங் மற்றும் சீனா போன்ற நாடுகளில் துணை நிறுவனங்களை செயற்படுத்தி இந்த நிறுனம் சருவதேச மட்டத்தில் முக்கிய நிறுவனமொன்றாக அமைவதற்கு வாய்ப்பு கிடைத்தமை பற்றியும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

2017 ஆம் ஆண்டளவில் நிறுவனத்தின் குறியிலக்கினை வெளிக்காட்டி நிரந்தர கட்டடத் தொகுதியொன்றில் நிறுவனத்தை தாபிக்கும் பணிகளின் ஆரம்பம் எனது தனிவேறான நோக்கினை அடைவதற்கும் அதேபோன்று நிறுவனத்தின் முழுமுயற்சி வெற்றி கொள்ளப்பட்டதாகவும் இதனை கருதுகின்றேன்.

மும்மணிகளின் ஆசீர்வாதம் கிடைக்கட்டும்

**கலாநிதி கொட்டபிட்டியே ராகுல தேரோ**
**பணிப்பாளர்**
2017-12-31

## பொருளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| அறிமுகம் | |
| முகாமைத்துவ சபை | |
| மூதவை | |
| கணக்காய்வுக் குழு | |
| நிறுவனத்தின் நிருவாக மற்றும் கற்கைக் கட்டமைப்பு | |
| பதவியணி தொடர்பிலான விபரங்கள் | |
| பாடநெறிகள் பற்றிய விபரம் | |
| மாணவர் விபரம் | |
| கல்விசார் பதவியணியும் வழங்கப்பட்ட ஆராய்ச்சி பட்டங்களும் | |
| வெளியீடுகள், புத்தாக்கங்கள், ஆராய்ச்சி பிரிவு | |
| கல்வி சுற்றுலாவும் மாநாடும் | |
| நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகள் | |
| அறிக்கை தொடர்புபட்ட பிற விடயங்கள் | |
| இறுதி கணக்குகள் - 2017 | |

## 01. பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம் - களனி பல்கலைக்கழகம்

களனி பல்கலைக்கழகத்தின் பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம் 1975 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, இது 1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவன சட்டத்திற்கு அமைவாக களனி பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமாக நடாத்திச் செல்லப்படுகின்றது. கல்வி மற்றும் நிருவாக கட்டமைப்பானது முகாமைத்து சபையினால் ஒழுங்குறுத்தப்படுகின்றன. பட்டப்பின் படிப்பு பாடநெறிகளின் அபிவிருத்தி, கற்கை பாடநெறிகளை நடாத்திச் செல்லல், ஆராய்ச்சி நடவடிக்கைகள் அதேபோன்று பரீட்சை நடவடிக்கைகளும் நிறுவனத்தின் பேரவை, முகாமைத்துவ சபை என்பவற்றின் ஊடாக களனிய பல்கலைக்கழகத்தின் மூதவையினதும் நிருவாக சபையினதும் அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிறுவனம் தற்போது பௌத்த தத்துவ கற்கைப் பிரிவு, பௌத்த கலாசார கற்கைப் பிரிவு மற்றும் பௌத்த மூலதத்துவ கல்வி கற்கைப் பிரிவு ஆகிய மூன்று கற்கைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. நிருவாக கட்டமைப்பும் அதேபோன்று நூலகமும் ஆராய்ச்சிப் பிரிவும் நிறுவனத்தின் முக்கிய பிரிவுகளுடன் இணைந்துள்ளன.

கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடாத்தப்படுவதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பட்டதாரிகளுக்காக உள்ள இந்த நிறுவனம் தற்போது தேசிய மட்டத்திலும் சருவதேச ரீதியிலும் பௌத்த தர்மத்தை கொண்டு செல்வதற்கு செயற்படுகின்றது. பாளி மற்றும் பௌத்த கல்வி பாடத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு வெளிநாட்டு பட்டதாரிகள் பல ஆயிரம் பேர்களுக்கு இந்த நிறுவனம் பட்டப்பின்படிப்பு பட்டத்தை வழங்கியுள்ளது. இதன் மூலம் நிறுவனத்தினால் கல்வி உலகிற்கு வழங்கிய பெயர்போன கல்விமான்கள் கல்வி உலகின் பல்வேறு துறைகளில் ஈட்டுபட்டு தேசிய பணியில் ஈடுபட்டுள்ளமை நிறுவனத்திற்கும் இலங்கைக்கும் அபிமானம் மிக்கதாகும்.

தேசிய மற்றும் சருவதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற கல்விமான்களைக் கொண்ட உள்நாட்டு வெளிநாட்டு பேதனாசிரியர்கள் குழு நிறுவனத்தின் பாடநெறிகளில் வளவாளர்களாக செயற்படுவதும் நிறுவனத்தின் பழைய பட்டதாரிகளினால் வெளிநாடுகளில் இந்த நிறுவனத்தில் துணை நிறுவனங்களை கையாள்வதும் நிறுவனம் கல்வியின்பால் வழங்கும் பங்களிப்புக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். உள்ளூர் ரீதியில் கல்வி, சமூக, கலாசார துறைகளின் மேம்பாட்டிற்கு பங்களிப்பினை நல்கி நிறுவனமானது சமூக பணியிலும் ஈடுபடும் நிறுவனமொன்றாகும்.

பல்வேறுபட்ட துறைகளின் ஊடாக பௌத்த தர்மத்தினைப் பரப்பி சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பௌத்த கல்வி பட்டப் பின்படிப்பு டிப்ளோமா, பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி, பௌத்த ஆயுள்வேத ஆலோசனை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி, பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி, பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி, பௌத்த கல்வி முதுமானி மற்றும் தத்துவமானி பாடநெறி போன்றவை ஆண்டு முழுவதும் நடாத்தப்படுகின்றது. போட்டி அடிப்படையில் தேசிய ரீதியில் ஈடுபட்டுள்ள இந்த நிறுவனம் தற்போது இலங்கையில் ஆகக்கூடுதலான வெளிநாட்டு பட்டதாரிகளுக்கு கல்வி வழங்கும் உலகின் முதற்தர நிறுவனமொன்றென உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் முன்னேற்ற அறிக்கையில் பல்கலைக்கழகங்களின் தரப்படுத்தல் மற்றும் சருவதேச மட்ட பல்கலைக்கழகங்கள் என்பதன் கீழ் வகுப்பீடு செய்யப்பட்டுள்ளமையை பெருமையுடன் குறிப்பிடவேண்டியுள்ளது.

நிறுவனத்தை ஆரம்பித்து முதலாவது பணிப்பாளராக செயலாற்றிய புகழ்மிக்க கல்விமான் ஒருவரான வணக்கத்திற்குரிய (கலாநிதி) ஹவன்பொல ரத்னசார தேரோ அவர்களினால் (1978-1979) ஆரம்பித்த பணி, பௌத்த சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்ற பேராசிரியர் எல்.பி.என்.பெரேரா அவர்கள் (1979-1984) பேராசிரியர் ஜோதிய வீரசேக்கர அவர்கள் (1984-1990) பேராசிரியர் வை.கருணாதாச அவரகள் (1991 - 2000), பேராசிரியர் திலக் காரியவசம் அவர்கள் (2000-2003), பேராசிரியர் அசங்க திலகரத்ன அவரக்ள் (2003-2007), பேராசிரியர் சுமனபால கல்மங்கொட அவர்கள் (2007-2013) போன்ற கல்விமான்களினதும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. கலாநிதி கொட்டம்பிட்டியே ராஹூல அனுநாயக்க தேரோ அவர்கள் தற்போது பணிப்பாளர் பதவியை வகித்து புதிய பாதையில் நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு முயற்சிக்கின்றமை மெச்சப்படவேண்டிய விடயமொன்றாகும்.

முன்பு ஆரம்பிக்கப்பட்ட நிலைபேறான அடிப்படையின் வலுவான தன்மை என்பதனை பயன்படுத்தி நிறுவனத்தின் சருவதேச உறவுகளை கட்டியெழுப்பி துணை நிறுவனங்களைப் பேணி அவற்றின் கல்வி நடவடிக்கைகள் ஒழுங்குறுத்தப்படுவது பௌத்த தர்மம் இந்த நாடுகளில் வசிக்கும் மக்களின் உள்ளத்தை அமைதி பண்ணும் பாரிய கொடையென தெளிவுபடுத்தியாகும். கற்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகள் சிங்கப்பூர் Buddhist Library Graduate School, ஹொங்கொங் Buddha-Dhamma Center மற்றும் சீனாவின் Buddhist Academy of Mt.Putuo போன்ற நிறுவனங்களுக்கு வருகை தருவது பௌத்த தர்மத்தை தமது வாழ்க்கையில் பின்பற்றும் அபிலாசையை கொண்டென அவற்றின் அறிக்கைகள் மூலம் தெளிவாகின்றது.

பொதுவாக களனி பல்கலைக்கழகத்தின் பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம் கடந்த தொடர்ச்சியான இரண்டு வருடங்களில் 'உண்மையானதும் சாதாரணமாதுமான' கணக்காய்வு கருத்துக்கு உரிமை கோரி உலகின் தேரவாத வழக்கினை ஆகக்கூடுதலான வெளிநாட்டு மாணவர்களுக்கு கற்பிக்கும் முதன்மை நிறுவனமொன்றாக மாறியுள்ளது. ஆரம்பத்திலிருந்தே நிறுவனத்தின் வெற்றி தேசிய பணியினை குறித்து நிற்கின்றது.

பட்டப்பின் படிப்பு பட்டதாரிகளுக்கு பட்டங்களை வருடாந்தம் வழங்கி தேசிய மற்றும் சருவதேசரீதியில் நிறைவேற்றும் பணியினை தொடர்ந்தும் பலமிக்கதாக்கி நிறுவனத்தின் நிலைபேறுடையத்தன்மை உறுதிப்படுத்துவது சகலரினதும் பிரார்த்தனையாகும்.

## 02. வெற்றிகள்

கடந்த ஐந்து வருட காலப் பகுதிக்குள் பாடநெறிகளின் எண்ணிக்கை உட்பட தேசிய மற்றும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து பௌத்த கல்வித்துறைக்குரிய பணிகளை உயர் தரத்திற்கு கொண்டுவருவதிலும் இந்த நிறுவனம் வெற்றிகண்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குரிய நிறுவனங்களில் வெளிநாட்டு மாணவர்களில் கூடுதலான எண்ணிக்கையினர் உள்ள நிறுவனமொன்றென உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டிறுதியில் நிரந்தர காணியொன்றின் உரிமையுடன் 2018 ஆம் ஆண்டில் புதிய கட்டடத் தொகுதியின் நிருமாணிப்பு பணிகள் பூர்த்தியடைவது நிறுவனத்தின் வரலாற்று ரீதியிலான மைற்கல்லொன்றாக பதிவு செய்யப்படுகின்றது.

நிறுவனத்தின் நீண்ட கால தேவையொன்றாக நிலவிய வாய்ப்பு நிலைகளை புதிய வடிவில் வெளிப்படுத்துதல், நிறுவன இணையத்தளத்தை இற்றறைப்படுத்தி பேணுதல் என்பன 2017 ஆம் ஆண்டில் விசேட விடயங்களின் கீழ் குறிப்பிடலாம். எடுக்கப்படுகின்றன. திணைக்கள குழுக்களை செயற்படுத்தி கல்வி நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் பங்களிப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளமையும் முக்கியமானதாகும்.

**சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை**

| | | உள்நாடு | வெளிநாடு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 2013 | 186 | 134 | 320 |
| 2. | 2014 | 285 | 128 | 413 |
| 3. | 2015 | 146 | 165 | 311 |
| 4. | 2016 | 154 | 261 | 415 |
| 5. | 2017 | 152 | 300 | 452 |

**படம்**

## 03. பின்னடைவுகளும் நியாயப்படுத்துகையும்

இந்த நிறுவனம் முப்பத்தைந்து வருடங்களுக்குக் கூடுதலான வரலாற்று உரிமையினைக் கொண்டுள்ளது. விடுதி அடங்கலாக நவீன இடவசதிகளுடன் சேவையினை வழங்குவதற்கு முடியுமாயிருப்பின் மாணவர்களின் கவனத்தை மேலும் ஈர்க்கலாம். நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்தியின்பால் இந்தப் பிரச்சினை மிக பிரதிகூலமாக தாக்கத்தை செலுத்துமெனக் குறிப்பிடுதல் வேண்டும். இலங்கையில் கூடுதலான வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்கும் இந்த நிறுவனத்தில் ஆகக்குறைந்த வசதிகள் இல்லாமையானது வெளிநாட்டு மாணவர்கள் கணிசமான அளவு குறைவடைந்து செல்வது கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

## 04. எதிர்காலத் திட்டங்கள்

1. இந்த நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட காணி சார்பில் கட்ட வசதிகளை பெற்றுக் கொள்வதற்கான கருத்திட்டப் பிரேரிப்புகள் தயாரிக்கப்பட்டுவருகின்றன.

2. நிறுவனம் சருவதேச நிறுவனங்களுடன் இணைதல்.

3. புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துதல்.

4. நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்ததும் அதேபோன்று இலங்கையில் பிக்குமார் சாசனத்திற்குரிய விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்தல், அதன் சிபாரிசுகளை அரசாங்கத்திற்கு கையளிப்பதற்கு திட்டமிடுதல்.

5. நிறுவனத்தின் இணையதளத்தை இற்றைப்படுத்தி தொடர்ச்சியாக நடாத்திச் செல்தல்.

6 நிறுவனத்தின் வாய்ப்பு நிலைகளை மேலும் திட்டமிடுதல்.

7. பதவியணியின் மேம்பாட்டிற்கு செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்.

8. மாணவர்களை மையப்படுத்திய கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் ஏற்பாடுகளை மேலும் முறைப்படுத்துதல்.

9. நிறுவனத்தின் ஆராய்ச்சியின் அளவெல்லையை அதிகரித்தல்.

## 05. தொழில் வாய்ப்புகள்

களனி பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களிலும் அநுராதபுரம் இலங்கை பிக்குமார் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் என்பன பாளி மற்றும் பௌத்த கல்வியை கற்பிக்கும் நிறுவனங்களாகும். இதற்கமைவாக, இலங்கையில் பாளி மற்றும் பௌத்த கல்வித் துறையில் தொழில் வாய்ப்புகள் பல நிலவுகின்றன. இந்த நிறுவனத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, கலைமானி, தத்துவமானி மற்றும் தத்துவ முதுமானி பாடநெறிகளை பூர்த்தி செய்தவர்களின் உதவி இந்த நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிறுவனத்தின் பாடநெறிகளைப் பூர்த்தி செய்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்விமான்கள் பலர் உயர் கல்வி நிறுவனங்களில் சேவையாற்றி வருகின்றனர்.

ஹொங்கொங் Buddha-Dhamma Center நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர் வணக்கத்திற்குரிய பேராசிரியர் கே.எல்.தம்மசோதி தேரோ அவர்களும் உலக பல்கலைக்கழக சங்கத்தின் பதிவாளரும் ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழத்தில் கற்கைப் பணிகளில் ஈடுபட்டுள்ளவருமான கலாநிதி கம்மாய் தம்மசாமி தேரோ அவர்களும் இந்த நிறுவனத்தின் கலாநிதி பட்டம் பெற்ற கல்விமான்களாவர். சீனா, யப்பான், ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிலுள்ள பெரும்பாலான உயர் கல்வி நிறுவனங்களில் இந்த நிறுவனத்தில் பாடநெறிகளை பூர்த்தி செய்ததன் பின்னர் சேவையாற்றும் பெரும்பாலானோர் உள்ளமை பற்றியும் குறிப்பிடலாம். இதைக் கொண்டு பார்க்கையில் இந்த கல்வி நிறுவனத்தின் பாடநெறிகளைப் பூர்த்தி செய்யும் சகலருக்கும் தொழில் வாய்ப்புகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவுகின்றமை விசேட அம்சமாகும்.

அத்துடன், பெரும்பாலான மாணவர்கள் தங்களுடைய பதவி உயர்வு கருதி பட்டப்பின் படிப்பினைக் கற்கின்றனர். ஆதலால் தொழில் பற்றிய பிரச்சினை இந்தப் பட்டதாரிகள் சம்பந்தமாக எழமாட்டாது.

**06.** **முகாமைத்துவ சபை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 140 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவன சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் முகாமைத்துவ சபையானது இந்த நிறுவனத்தின் நிறைவேற்று சபையாகும். இதன் உறுப்பினர்கள் பின்வருவோர்களாவர்.

**உத்தியோகபூர்வமாக**

1. வணக்கத்திற்குரிய பேராசிரியர் கொட்டபிட்டியே ராஹுல தேரோ அவர்கள் - பணிப்பாளர் (தலைவர்).

2. திரு.பி.ஜீ.ஜயசிங்க - உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவர். (2017-07-06 வரை)
திரு.எம்.ஏ.ஐ.கே.மன்திறீரத்ன - 2017-10-12 ஆம் திகதியிலிருந்து

3. திருமதி தரணி அனோஜா கமகே - கலாசார அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவர்.

**நிறுவன கல்விப் பிரிவுகளின் தலைவர்கள்**

4. வணக்கத்திற்குரிய பேராசிரியர் ரலுவே பத்மசிறி தேரோ அவர்கள் - தலைவர், பௌத்த தத்துவ கல்விப் பிரிவு.

5. வணக்கத்திற்குரிய பேராசிரியர் மிரிஸ்வத்தே விமலஞான தேரோ அவர்கள் - தலைவர், பௌத்த கலாசார கல்விப் பிரிவு

6. பேராசிரியர் (திரு) டபிள்யு.எம்.தேசப்பிரிய குணசேன, தலைவர், பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு.

**களனி பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

7. திரு.டீ.பீ.விஜேகோன்
8. மருத்துவர் (திரு) நந்த அமரசேக்கர

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

9. பேராசிரியர் (திரு) விமல் ஜீ.பலகல்லே
10. பேராசிரியர் (திருமதி) குசுமா கருணாரத்ன
11. பேராசிரியர் (திரு) தயா எதிரிசிங்க
12. திரு.சீ.மாலியத்த

**திறைசேரி பிரதிநிதி**

13. திரு.ஆர்.எம்.எஸ்.பி.எஸ்.பண்டார - பணிப்பாளர், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்.

**கவனிப்பாளர்கள்**

14. திரு.எல்.ஏ.சுமித் ஜயசேக்கர - சிரேட்ட உதவிப் பதிவாளர்
15. திருமதி.ஏ.பி.எஸ்.எம்.தொலகே - சிரேட்ட உதவி நிதிப் பொறுப்பாளர்

**07.** பேரவை

1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவன சட்டத்தின் 13 ஆம் பிரிவுக்கு அமைவாக பேரவையொன்று இருக்க வேண்டுமென்பதோடு, இது நிறுவனத்தின் கல்வி சபையாகும். இதன் உறுப்பினர்கள் பின்வருவோர்களாவர்.

**உத்தியோகபூர்வமாக**

1. வணக்கத்திற்குரிய பேராசிரியர் கொட்டபிட்டியே ராஹுல தேரோ அவர்கள் - பணிப்பாளர் (தலைவர்).

2. வணக்கத்திற்குரிய பேராசிரியர் ரலுவே பத்மசிறி தேரோ அவர்கள் - தலைவர், பௌத்த தத்துவ கல்விப் பிரிவு.

3. வணக்கத்திற்குரிய பேராசிரியர் மிரிஸ்வத்தே விமலஞான தேரோ அவர்கள் - தலைவர், பௌத்த கலாசார கல்விப் பிரிவு .

4. பேராசிரியர் (திரு) டபிள்யு.எம்.தேசப்பிரிய குணசேன - தலைவர், பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு.

**களனி பல்கலைக்கழகத்தின் பின்வரும் கல்விப் பிரிவுகளின் தலைவர்கள்**

5. வணக்கத்திற்குரிய பேராசிரியர் கஹாபொல சுகதரதன தேரோ அவர்கள் - (பிரதிநிதி - களனி பல்கலைக்கழகத்தின் கலாசார கல்விப் பிரிவு)

6. வணக்கத்திற்குரிய பேராசிரியர் தராலே தம்மரதன தேரோ அவர்கள் - (களனி பல்கலைக்கழகத்தின் பாளி மற்றும் பௌத்த கல்விப் பிரிவுத் தலைவர்)

**நிறுவனத்தின் கல்விப் பிரிவுகளின் தலைவர்கள்**

7. பேராசிரியர் (திரு) பி.ஆர்.வசந்த பிரியதர்ஷன - பௌத்த கலாசார கல்விப் பிரிவு

8. வணக்கத்துக்குரிய கலாநிதி வடிநாகல பஞ்சாலோக்க தேரோ அவர்கள் - பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு.

9. கலாநிதி (திரு) அசோக்க வெலிதொட்ட - பௌத்த தத்துவ கல்விப் பிரிவு.

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

10. வணக்கத்திற்குரிய பேராசிரியர் அங்கலகட சிறிசுமன தேரோ அவர்கள்
11. வணக்கத்திற்குரிய கலாநிதி மெதகம்பிட்டியே விஜிததம்ம தேரோ அவர்கள்
12. பேராசிரியர் (திரு) ரத்ன விஜேதுங்க
13 மருத்துவர் (திரு) அமரசிறி பொன்னம்பெரும
14. கலாநிதி (திரு) பிரனீத் அபயசுந்தர

**கவனிப்பாளர்கள்**

15. திரு.எல்.ஏ.சுமித் ஜயசேக்கர - சிரேட்ட உதவிப் பதிவாளர்
16. திருமதி எம்.பீ.வை.ஜீ.பெரேரா - உதவிப் பதிவாளர்

**அழைப்பின்பேரில்**

17. திருமதி கீதானி அத்தநாயக்க - சிரேட்ட உதவி நூலகர்

## 08. கணக்காய்வுக் குழு

நிறுவனத்தின் கணக்காய்வுக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.எம்.எஸ்.பி.எஸ்.பண்டார | - | பணிப்பாளர் (தலைவர்) - திறைசேரி பிரதிநிதி |
| 2. | திரு.பி.ஜீ.ஜயசிங்க - மேலதிகச் செயலாளர்<br><br>திரு.எம்.ஏ.ஐ.கே.மன்திறீரத்ன | -<br><br>- | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு (உயர் கல்விப் பிரிவு) 2017-05-25 வரை<br>2017-10-27 ஆம் திகதியிலிருந்து |
| 3. | பேராசிரியர் (திரு) விமல் ஜீ.பலகல்லே | - | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 4. | திருமதி எஸ்.எம்.எஸ்.சமரவீர | - | உதவி உள்ளக கணக்காய்வாளர் |
| 5. | திருமதி பத்மா அத்துகோரள | - | கணக்காய்வு அத்தியட்சகர் - அரசாங்க கணக்காய்வுப் பிரிவு |
| 6. | திரு.எம்.எம்.ஜே.ஆர்.போகமுவ | - | பிரதான உள்ளக கணக்காய்வாளர் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| 7. | திரு.எல்.ஏ.சுமித் ஜயசேக்கர | - | சிரேட்ட உதவிப் பதிவாளர் - செயலாளர் |
| | **கவனிப்பாளர்கள்** | | |
| 8. | திருமதி ஏ.பி.எஸ்.எம்.தொலகே | - | சிரேட்ட உதவி நிதிப் பொறுப்பாளர் |
| 9. | திருமதி கீதானி அத்தநாயக்க | - | சிரேட்ட உதவி நூலகர். |
| 10. | செல்வி.எம்.பீ.வை.ஜீ.பெரேரா | - | உதவி பதிவாளர் |

**09. நிறுவனத்தின் நிருவாக மற்றும் கற்கைக் கட்டமைப்பு**

| | | |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் | வணக்கத்திற்குரிய பேராசிரியர் கொட்டபிட்டியே ராஹுல தேரோ அவர்கள்,<br>B.A.(Hons),M.A.,PhD |
| 02. | சிரேட்ட உதவிப் பதிவாளர் | திரு.எல்.ஏ.சுமித் ஜயசேக்கர B.A. (SJP)<br>PGD (UOC)<br>Dip. in Advanced English (UOC) |
| 03. | சிரேட்ட உதவி நிதிப் பொறுப்பாளர் | திருமதி.ஏ.பி.எஸ்.எம்.தொலகே<br>B.Sc.Business Admn(Sp) (SJP) |
| 04 | சிரேட்ட உதவி நூலகர் | திருமதி.எம்.கே.கீதானி அத்தநாயக<br>B.A.(Hons) M.A (பேராதனை)<br>MLSc.(கொழும்பு) |
| 05. | உதவிப் பதிவாளர் | செல்வி எம்.பீ.வை.ஜீ.பெரேரா (2016-10-13 ஆம் திகதியிருந்து)<br>B.Sc.Business Admn(Sp) (SJP)<br>M.A.(Econ) (களனி) |
| **கல்வி பிரிவுகளும் தலைவர்களும்** | | |
| 06. | பௌத்த தத்துவ கல்விப் பிரிவு | வணக்கத்திற்குரிய பேராசிரியர் ரலுவே பத்மசிறி தேரோ அவர்கள்<br>M.A.(National University of Shigapore) |
| 07. | பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு | பேராசிரியர் (திரு) டபிள்யு.எம்.தேசப்பிரிய குணசேன<br>Doctor of Philosohphy<br>M.A.(Linguistics) (SJP)<br>Grantavisarada |
| 08. | பௌத்த கலாசார கல்விப் பிரிவு | வணக்கத்திற்குரிய பேராசிரியர் மிரிஸ்வத்தே விமலஞான தேரோ அவர்கள்<br>Mphill (University of Peradeniya) |

## 10. பதவியணி தொடர்பிலான விபரங்கள் - 2017

| கிளை | சிரேட்ட நிலை | பதவியினர் | கனிஷ்ட ஊழியர் | தொழிலாளர் |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் அலுவலகம் | பணிப்பாளர் - 01 | எழுதுநர் - தரம் iii - 01 | - | - |
| கல்விப் பிரிவு - 01. பௌத்த தத்துவ கல்விப் பிரிவு 02. பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு 03. பௌத்த கலாசார கல்விப் பிரிவு | - | எழுதுநர் - தரம் iii - 01 | - | - |
| தாபன மற்றும் நிருவாகக் கிளை<br><br>ஆராய்ச்சிக் கிளை | சிரேட்ட உதவி பதிவாளர் - 01 | சிரேட்ட பதவிநிலை உதவியாளர் (சுருக்கெழுத்தாளர் - சிங்களம்) - 01<br>எழுதுநர் தரம் iii - 01<br><br>கணனி தரவு உள்ளீர்ப்பு உதவியாளர் (பயிற்சி) - 01<br><br>விஞ்ஞான உதவியாளர் தரம் i - 01<br><br>விஞ்ஞான உதவியாளர் - 01 | அலுவலக இயந்திர இயக்குநர் - 01 (தரம் ii)<br><br>சாரதி தரம் ii - 02 | அலுவலக உதவியாளர் - 01<br>தொழிலாளர் (விசேட தரம்) - 01<br><br>தொழிலாளர் தரம் iii - 01 |
| பரீட்சைகள் மற்றும் மாணவர் பணிகள் கிளை | உதவி பதிவாளர் - 01 | கணனி தரவு உள்ளீர்ப்பு உதவியாளர் தரம் iii - 03 | | |
| கணக்குக் கிளை | சிரேட்ட உதவி நிதிப் பொறுப் பாளர் - 01 | சிரேட்ட பதவிநிலை உதவியாளர் (எழுதுநர்) - 01<br>சிரேட்ட பதவிநிலை உதவியாளர் (கணக்குப் பதியுநர்) - 01<br>சிரேட்ட பதவிநிலை உதவியாளர் (சிறாப்பர்) - 01<br>களஞ்சியப் பொறுப்பாளர் தரம் ii - 01<br>கணனி தரவு உள்ளீர்ப்பு உதவியாளர் (பயிற்சி) - 01 | - | தொழிலாளர் தரம் iii - 01 |
| நூலகம் | சிரேட்ட உதவி நூலகர் - 01 (தரம் i) | உதவி நூலகர் தரம் iii - 01 | நூலக உதவியாளர் தரம் ii - 02 | - |

**11. பாடநெறிகள் பற்றிய விபரம்**

நடைமுறையில் பின்வரும் பாடநெறிகளும் ஆராய்ச்சி நிகழச்சித்திட்டங்களும் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் நடாத்தப்பட்டு வருகின்றன.

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் தமிழ் பெயர் |
|---|---|---|
| 01. | Postgraduate Diploma in Buddhist Studies | பௌத்த கல்வி பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி |
| 02. | Master of Arts Degree in Buddhist Studies | பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி |
| 03. | Postgraduate Diploma in Pali Studies | பாளி கல்வி பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி |
| 04. | Master of Arts Degree in Pali Studies | பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி |
| 05. | Master of Philosophy in Buddhist Studies (MPhil) | பௌத்த கல்வி தத்துவ பட்டம் |
| 06. | Doctor of Philosophy Buddhist Studies (PhD) | பௌத்த கல்வி தத்துவ முதுமானி பட்டம் |
| 07. | Postgraduate Diploma in Buddhist Ayurvedic Counseling | பௌத்த ஆயுள்வேத ஆலோசனை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி |
| 08. | Master of Arts Degree Course in Buddhist Ayurvedic Counseling | பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி |
| 09. | Postgraduate Certificate Course in Pali | பாளி பட்டப்பின் படிப்பு சான்றிதழ் பாடநெறி |
| 10. | English Through Buddhism | |

## 12. மாணவர் விபரம் - 2017

**சிங்கள மொழிமூலம்**

| பாடநெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் | சித்தியடைந்த வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | 06 | 06 | 05 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | 116 | 96 | 84 |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | 04 | 04 | 03 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | 18 | 17 | 15 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி | 39 | 35 | 34 |

**ஆங்கில மொழிமூலம்**

| பாடநெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் | சித்தியடைந்த வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | 28 | 25 | 23 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | 251 | 250 | 226 |
| பாளி கல்வி முதுமானி பட்டப் பாடநெறி | 06 | 03 | 02 |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி (சிங்கப்பூர்) | 02 | 02 | 02 |
| பௌத்த கல்வி முதுமானி பட்டப் பாடநெறி (சிங்கப்பூர்) | 07 | 06 | 06 |
| பௌத்த கல்வி முதுமானி பட்டப் பாடநெறி (ஹொங்கொங்) முழுநேர மற்றும் பகுதிநேர | 38 | 16 | 16 |
| முதுமானி பட்டப் பாடநெறி (சீனா) | 13 | 13 | 10 |

**ஆராய்ச்சிப் பட்டத்தினைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை**

| பட்டம் | சிங்கள மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
|---|---|---|
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி (MPhil.) | 66 | 73 |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி (PhD) | 16 | 35 |

**13. பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை - 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டுவரை**

| பாடநெறியின் பெயர் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 12 | 11 | 10 | 13 | 06 |
| பௌத்த கல்வி பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 12 | 229 | 28 | 26 | 28 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 12 | 125 | 73 | 91 | 126 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 194 | 175 | 186 | 264 | 275 |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 15 | 12 | 04 | 04 | 05 |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | - | - | - | - | 06 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 11 | 65 | 54 | 26 | 18 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 19 | 25 | 55 | 46 | 41 |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி - சிங்கப்பூர் - துணை நிறுவனம் The Buddhist Library Graduate School | 05 | 08 | 07 | 10 | 02 |
| பௌத்த கல்வி முதுமானி பட்டப் பாடநெறி - சிங்கப்பூர் - துணை நிறுவனம் The Buddhist Library Graduate School | 05 | - | 08 | 03 | 07 |
| பௌத்த கல்வி முதுமானி பட்டப் பாடநெறி - ஹொங்கொங் - துணை நிறுவனம் Buddha-Dhamma Center | - | - | 18 | 43 | 10 |
| முதுமானி பட்டப் பாடநெறி - சீனா - Buddhist Academy of Mt.Putuo | - | - | - | - | 131 |
| English Through Buddhism Course | 115 | 104 | 126 | 174 | 115 |
| பாளி பட்டப்பின் படிப்பு சான்றிதழ் பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | - | - | - | - | 24 |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி (MPhil.) (சிங்கள மொழிமூலம்) | 96 | 81 | 77 | 64 | 66 |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி (MPhil.) (ஆங்கில மொழிமூலம்) | 46 | 72 | 67 | 71 | 73 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி (PhD) (சிங்கள மொழிமூலம்) | 35 | 46 | 41 | 14 | 16 |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி (PhD) (ஆங்கில மொழிமூலம்) | 26 | 38 | 30 | 34 | 35 |
| **மொத்தம்** | **603** | **991** | **784** | **883** | **866** |

**படம்**

**14.** **சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை**

| | வருடம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| 01. | 2013 | 186 | 134 |
| 02. | 2014 | 285 | 128 |
| 03. | 2015 | 146 | 165 |
| 04. | 2016 | 154 | 261 |
| 05. | 2017 | 152 | 300 |

**படம்**

## 15. வள மற்றும் மாணவர் எண்ணிக்கை - 2017

| பாடநெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | கல்விசார் பதவியினர் |
|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 06 | பணிப்பாளர்<br>பேராசிரியர் - 04<br>சிரேட்ட விரிவுரையாளர் - 02<br>சிரேட்ட உதவி நூலகர் |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 26 | |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 116 | |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 251 | |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 04 | |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 18 | |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 39 | |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 66 | |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 73 | |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 16 | |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 35 | |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி - வெளிவாரி (ஆங்கில மொழிமூலம்) | 30 | |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி - வெளிவாரி(ஆங்கில மொழிமூலம்) | 02 | |

**16. பாடநெறிகளை பூர்த்திசெய்த உள்நாட்டு மாணவர்கள் - 2017**

| பாடநெறி | மொழிமூலம் | பரீட்சைக்குத் தோற்றியோர் (2016) | பரீட்சைக்குத் தோற்றியோர் (2017) |
|---|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | சிங்களம் | 11 | 05 |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | ஆங்கிலம் | 02 | 24 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | சிங்களம் | 75 | 86 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | ஆங்கிலம் | 09 | 265 |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | சிங்களம் | 04 | 03 |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | ஆங்கிலம் | - | 02 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | சிங்களம் | 22 | 15 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி | சிங்களம் | 43 | 35 |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி | சிங்களம் | 01 | 04 |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி | ஆங்கிலம் | - | 02 |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி | சிங்களம் | 06 | 04 |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி | ஆங்கிலம் | 06 | 07 |

## 16. பாடநெறிகளை பூர்த்திசெய்த உள்நாட்டு மாணவர்கள் - 2017

| பாடநெறி | மொழிமூலம் | பரீட்சைக்குத் தோற்றியோர் (2016) | பரீட்சைக்குத் தோற்றியோர் (2017) |
|---|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | சிங்களம் | 11 | 05 |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | ஆங்கிலம் | 02 | 24 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | சிங்களம் | 75 | 86 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | ஆங்கிலம் | 09 | 265 |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | சிங்களம் | 04 | 03 |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | ஆங்கிலம் | - | 02 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | சிங்களம் | 22 | 15 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி | சிங்களம் | 43 | 35 |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி | சிங்களம் | 01 | 04 |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி | ஆங்கிலம் | - | 02 |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி | சிங்களம் | 06 | 04 |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி | ஆங்கிலம் | 06 | 07 |



## 17. பாடநெறிகளை பூர்த்திசெய்த வெளிநாட்டு மாணவர்கள் - 2017

| பாடநெறி | மொழிமூலம் | பரீட்சைக்குத் தோற்றியோர் (2016) | பரீட்சைக்குத் தோற்றியோர் (2017) |
|---|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | ஆங்கிலம் | 22 | 20 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | ஆங்கிலம் | 212 | 245 |
| பாளி கல்வி முதுமானிப் பட்டப் பாடநெறி | | - | 01 |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி | ஆங்கிலம் | - | 01 |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி | ஆங்கிலம் | - | 04 |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி - வெளிவாரி | ஆங்கிலம் | 10 | 02 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி - வெளிவாரி | ஆங்கிலம் | 23 | 35 |

## 18. பரிசு வழங்கல்

| விடயம் | பரிசுகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்டவர் |
|---|---|---|
| (அ) உள்நாட்டு / வெளிநாட்டு பரிசு பெறுவோர் | 01 | "சுவர்ண முத்திரிக்காவ" (பௌத்த கல்வி கலை முதுமானி - ஆங்கிலம்) (பாடநெறியில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்) Ven Panna Theri |
| | | "ரஜத்த முத்திரிக்காவ" (பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சிங்களம்) - (பாடநெறியில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்) வணக்கத்துக்குரிய களனியே சுதீரா சுதம்மசாரி பிக்குனி அவர்கள் |
| (ஆ) ஈ.டபிள்யு.குணதிலக்க புலமைபரிசில் நிதியம் | 01 | பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சிங்களம்) - (பாடநெறியில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்) (கலை முதுமானி பட்டப் படிப்பு பாடநெறி கட்டணத்திலிருந்து விலக் களித்தல்) வணக்கத்துக்குரிய களனியே சுதீரா சுதம்மசாரி பிக்குனி அவர்கள் |
| (இ) மஹாயானா கற்கையில் புலமை காட்டும் மாணவர்களுக்கு வழங்கும் புலமைபரிசில் | 02 | |

## 19. கல்விசார் பதவியினர் - 2017

| திணைக்களம் | மொழி மூலம் | சிரேட்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேட்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் |
|---|---|---|---|---|---|
| பௌத்த தத்துவக் கல்விப் பிரிவு | | - | 01 | 01 | - |
| பௌத்த கலாசார கல்விப் பிரிவு | | - | 02 | - | - |
| பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு | | - | 01 | 01 | - |
| ஆராய்ச்சிப் பிரிவு | | - | - | - | - |

## 20. 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஆராய்ச்சிப் பட்டம்

| பெயர் | பட்டம் | ஆராய்ச்சிப் பட்டத்திற்கான தலையங்கம் | அபேட்சகரின் நாடு |
|---|---|---|---|
| வணக்கத்துக்குரிய ஊரபலவ்வே ஹேமாராம தேரோ அவர்கள் | தத்துவ முதுமானி (சிங்களம்) | An analytical study on the rehabilitation concept in the Buddhist discipline and its use | இலங்கை |
| திரு.பி.எச்.ஜீ.தர்மசிரி | தத்துவ முதுமானி (சிங்களம்) | An explanatory study on the institutional organization concept revealed in the disciplinary Literature | இலங்கை |
| திரு.ரணசிங்க ஆரச்சிகே ரோஹணபிரிய சுசந்த | தத்துவ முதுமானி (சிங்களம்) | An analytical study on Buddhist Ayurvedic treatment to be used in curing the psycho-physical issues of women | இலங்கை |
| திருமதி எஸ்.எம். சமரவிக்கிரம | தத்துவ முதுமானி (ஆங்கிலம்) | A Comparative study of the concept of Attendant (Nursing) in Buddhist Ayurvedic and Western medical tradition | இலங்கை |
| திருமதி நாலிக்கா மல்லவதந்திர | தத்துவ முதுமானி (ஆங்கிலம்) | An analytical study of psychological dimensions reflected in the biographies of the Pali canon | இலங்கை |
| வணக்கத்துக்குரிய சுங் கவன்யு | தத்துவ முதுமானி (ஆங்கிலம்) | An analytical study of the dynamics of Craving (Tanhã) and Ignorance (avijjã) in the process of generating suffering (dukkha) | கொரியா |
| அருட்தந்தை கொலம்ப மோதர பரண பட்டபெந்திகே பிரியலால் பெரேரா | தத்துவமானி (ஆங்கிலம்) | Buddhist and Christian teachings related to Community Service : a comparative study | இலங்கை |

## 21. வெளியீடுகள்

"அன்வேஷன" - 2016 இல் வெளியிடப்பட்டது.

நிறுவன செய்தி கடிதம் (News Letter) வெளியிடப்பட்டது.

## 22. நூலகம்

பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் செயற்பணியானது பௌத்த பட்டப்பின் படிப்பு சார்பில் ஏற்ற வாய்ப்புகளை உருவாக்குதல் அவற்றுக்கு ஒத்தாசை நல்குதல் பௌத்த கல்வியின்பால் நற்பெயரை உருவாக்குதல் பௌத்த கல்வித்துறையில் ஆராய்ச்சி தேர்ச்சியினை விருத்தி செய்தல் என்பனவாகும். இந்த செயற்பணியை வெற்றி கொள்வதில் பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் நூலகம் முக்கிய பணியினை நிறைவேற்றுகின்றது. இதற்கமைவாக, நிறுவனத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடும் கல்வியாளர்களுக்கும் கல்விசார் பதவியணியினருக்கும் தேவையான ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை தகவல் மூல வளங்களையும் பிற உரிய வசதிகளையும் வழங்குவது நூலகத்தின் பிரதான பொறுப்பாகம். இதற்கு மேலதிகமாக வெளிவாரி நூலக உறுப்பினர்களின் கீழ் உள்நாட்டு வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவையான ஆய்வு வசதிகளையும் நூலகத்தின் ஊடாக வழங்கப்படுகின்றது.

தற்போது இந்த நிறுவனத்தின் நூலகத்திற்குச் சொந்தமான சுமார் 22,000 நூல்கள் உள்ளன. இவற்றில் 90 சதவீதமானவை பௌத்த நூல்களாக காணக்கூடியதாகவுள்ளமை விசேட அம்சமாகும். பட்டப்பின்படிப்பு பாடநெறிகளுக்கும் பௌத்த ஆராய்ச்சித் தலையங்கங்களுக்கும் அமைவாக நூலகத்திற்கான நூல்கள் திரட்டப்படுகின்றன.

இதனால் பௌத்த மதம் அதன் பிரிவுகளின்பாலும் பாளி மொழி, பாளி வரலாறு, பௌத்த நுண்கலை, பௌத்த தத்துவம் போன்ற விடயங்களின்பாலும் கூடிய கவனம் செலுத்தி நூல்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பௌத்த மதம் சார்ந்த புதிய கலைக்களஞ்சியங்கள், அகராதிகள் போன்ற ஆய்வு நூல்களும் பயன்படுத்துவதற்காக உள்ளன.

அதேபோன்று ஏழு மொழிமூலங்களில் (பாளி, சிங்களம், ஆங்கிலம், பர்மா, கம்போதியா, தேவநாகிரி, தாய்) அச்சிடப்பட்ட தேரவாத திரிபீடகம் உட்பட சீன மதம் தொடர்பிலான தைஷோ வெளியீடும் உள்ளன.

ஆராய்ச்சி பட்டதாரிகளினால் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட தத்துவ மற்றும் தத்துவ முதுமானி பட்டப்படிப்புக்கான ஆராய்ச்சி கட்டுரை திரட்டொன்று நூலகத்தில் உள்ளது.

**நூலக சேவைகள்**

**வாசகர்களுக்காக பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன:**

ஆய்வு சேவை
நூல்கள் வழங்கும் சேவை
பிரதியெடுத்தல் சேவை
இணைய சேவை
கணனிப் பாவனை மற்றும் அச்சுப் பிரதிகளை வழங்கும் சேவை
சருவதேச நூலக சேவை
பட்ட படிப்பிற்கான ஆய்வு கட்டுரைகள் புத்தகம் கட்டும் சேவை

**நூலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை**

வெளிவாரி வாசகர்களுக்கு ஆய்வு செய்யும் வசதிகள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதோடு, ஏனையோர் சார்பில் ஆய்வு மற்றும் புத்தகங்களை கொண்டு செல்லும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக பின்வருமாறு நூலக உறுப்புரிமை 2017 ஆம் ஆண்டு சார்பில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| போதனாசிரியர்கள் | - 07 |
| கல்விசாரா பதவியணியினர் | - 22 |
| பட்டப்பின் படிப்பு அபேட்சகர்கள் | - 471 |
| வெளிவாரி வாசகர்கள் | - 42 |
| **மொத்தம்** | - 542 |

**பதவியணி கட்டமைப்பு**

பின்வரும் பதவியணியினர் மேற்போந்த வாசகர்களுக்கான சகல சேவைகளையும் வழங்குகின்றனர்.

| | |
|---|---|
| சிரேட்ட உதவி நூலகப் பொறுப்பாளர் | - 01 |
| உதவி நூலகர் | - 01 |
| நூலக உதவியாளர் | - 02 |
| மொத்தம் | - 04 |

**2017 ஆம் ஆண்டில் நூல்கள் கொள்வனவு செய்தலும் நன்கொடையாக கிடைத்தவையும்**

நிறுவனத்தின் வருடாந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் கொள்வனவு செய்யப்பட்ட நூல்களும் நன்கொடையாக கிடைத்த நூல்களும் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| கொள்வனவு செய்யப்பட்ட நூல்களின் எண்ணிக்கை | - 622 |
| நன்கொடையாக கிடைத்த நூல்களின் எண்ணிக்கை | - 945 |
| மொத்தம் | - 1567 |

**23. ஆராய்ச்சிப் பிரிவு**

**வணக்கத்திற்குரிய மடிஹே சுகத்தசிறி தேரோ - விஞ்ஞான உதவியாளர்**

**திரு.தில்ஷான் மனோஜ் ராஜபக்ஷ - விஞ்ஞான உதவியாளர்**

தத்துவமானி மற்றும் கலாநிதி பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பற்றிய மதிப்பீட்டாளர்களினால் பிரேரிக்கப்பட்ட திருத்தங்கள் அபேட்சகர்களினால் சரியாக செய்யப்பட்டுள்ளதாவென பரிசீலனை செய்து அறிக்கையிடுவதற்கும் ஆராய்ச்சி கற்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் சார்பில் விசேட விரிவுரைகளை ஒழுங்கு செய்தல் அதேபோன்று பொது ஆராய்ச்சி மாணவர்களுக்கு அவர்களுடைய ஆராய்ச்சிப் பணிகளை நடாத்திச் செல்வதற்கு வழிகாட்டுதலும் இந்தப் பிரிவிற்கூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 24. கல்வி சுற்றுலா

2017 ஆகஸ்ட் மாதம் 08 மற்றும் 09 ஆகிய இரண்டு தினங்கள் வெளிநாட்டு மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாவானது அநுராதபுரம், மிஹிந்தலை வரலாற்று நகரங்கள் சார்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதன் சார்பில் சுமார் 155 பேர்கள் கலந்துகொண்டதோடு, வகுப்பறை அறிவினை செய்முறை செயற்பாடுகளாக வெளிக்கள ஆய்வு வடிவத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. கல்விசார் பதவியணியினரும் வெளிவாரி கல்விமான்களும் வளவாளர்களாக செயற்பட்டதோடு, மாணவர்கள் எதிர்பார்த்த பெறுபேற்றினை அடையும் விதத்தில் கல்விச் சுற்றுலாவானது வெற்றிகரமாக இரண்டு நாட்கள் நடாத்தப்பட்டது.

## 25. மாநாடு

பிக்குமார்களின் ஒழுக்கநெறிகள், கலந்துரையாடல், நவீன சவால்கள் என்னும் தலைப்பில் தேசிய மாநாட்டின் இரண்டாவது கட்டமானது 2017-03-14 ஆம் திகதியன்று இந்த நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

துறைசார்ந்த நிபுணர்கள் பலரின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டமானது நான்கு செயலமர்வுகளாக ஒருநாள் முழுவதும் நடாத்தப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் அடுத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதோடு, இந்த ஆண்டிலேயே அடுத்த இரண்டாவது நிகழ்ச்சித்திட்டத்தையும் ஒழுங்கு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைவாக கலந்துரரையாடலின் மூன்றாவது மாநாடானது 2017-10-16 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இறுதி மாநாடானது 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டு, 2019 ஆம் ஆண்டில் பிரேரிப்புகள் உரிய தரப்புக்கு தொடர்புபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

## 26. மீண்டுவரும் செலவினம் -

| விடயம் | 2016<br>ரூ.ச | 2017<br>ரூ.ச | வித்தியாசம் |
|---|---|---|---|
| (அ) சம்பளங்களும் ஊதியங்களும் | 40,629,392 | 48,910,105 | 8,280,713 |
| (ஆ) பிரயாணச் செலவுகள் | 1,184,729 | 1,352,953 | 168,224 |
| (இ) வழங்கல் | 1,280,809 | 2,207,817 | 927,008 |
| (ஈ) பராமரிப்பு | 1,138,048 | 1,168,338 | 30,290 |
| (உ) ஒப்பந்த சேவைகள் | 15,123,678 | 16,830,032 | 1,706,354 |
| (ஊ) பிற | 27,903,405 | 29,134,694 | 1,231,289 |
| **மொத்தம்** | **87,260,061** | **99,603,939** | **12,343,878** |

## 27. மூலதனச் செலவினம்

| விடயம் | 2016<br>ரூ.ச | 2017<br>ரூ.ச | வித்தியாசம் |
|---|---|---|---|
| (அ) காணி | - | 148,634,464 | 148,634,464 |
| (ஆ) தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் கொள்வனவு செய்தல் | 1,167,683 | 5,124,431 | 3,956,748 |
| (இ) இயந்திர சாதனங்கள் கொள்வனவு செய்தல் | - | - | - |
| (ஈ) கட்டடங்கள் | - | - | - |
| (உ) பிற | 1,118,489 | 2,950,432 | 1,831,942 |
| **மொத்தம்** | **2,286,172** | **156,709,327** | **154,423,155** |

## 28. நிதிசார் முன்னேற்றம் (செலவு)

| விடயம் | | வரவுசெலவுத்திட்ட ஒதுக்குகை ரூ.ச | | செலவு ரூ.ச | | சேமிப்பு/ குறைபாடு ரூ.ச | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 |
| (அ) | மீண்டுவரும் (கருத்திட்டங்கள் தவிர) | 57,200,000 | 67,742,000 | 70,327,036 | 81,376,235 | (13,127,036) | (13,634,235) |
| (ஆ) | மூலதனம் (கருத்திட்டங்கள் தவிர) | 10,000,000 | 158,634,000 | 2,286,172 | 156,709,327 | 7,713,828 | 1,924,673 |
| (இ) | கருத்திட்டங்கள் - உள்நாட்டு முதலீடு | 12,800,000 | 12,850,000 | 16,933,025 | 18,228,087 | (4,133,025) | (5,378,087) |
| (ஈ) | கருத்திட்டங்கள் - வெளிநாட்டு முதலீடு | - | - | - | - | - | - |
| | **மொத்தம்** | **80,000,000** | **239,226,000** | **89,546,233** | **256,313,649** | **(9,546,233)** | **(17,087,649)** |

## 29. நிதிசார் முன்னேற்ற விபரம் (ஈட்டப்பட்ட வருமானம்)

| வருமான வழி | | ஒதுக்குகை ரூ.ச | | மொத்தம் வருமானம் ரூ.ச | | ஒதுக்குகை ரூ.ச | மொத்தம் வருமானம் ரூ.ச |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 |
| (அ) | பட்ட அபேட்சகர்கள் | - | - | - | - | - | - |
| (ஆ) | பட்டப்பின் படிப்பு | 57,200,000 | 34,150,000 | 36,830,886 | 44,572,877 | 20,369,114 | (10,422,877) |
| (இ) | மதியுரைச் சேவை | - | - | - | - | - | - |
| (ஈ) | பிற | 12,800,000 | 12,850,000 | 19,156,064 | 23,856,473 | (6,356,064) | (11,006,473) |
| | **மொத்தம்** | **70,000,000** | **47,000,000** | **55,986,950** | **68,429,350** | **14,013,050** | **(21,429,350)** |

## 30. நிதிசார் முன்னேற்ற ஆய்வு - 2017

| | விடயம் | திட்டம் | மாணவர் ஒருவருக்கான செலவு | |
|---|---|---|---|---|
| | | | **2016** | **2017** |
| (அ) | மாணவர் ஒருவருக்கான மீண்டுவரும் செலவினம் | மீண்டுவரும் செலவினம் - மாணவர்களின் எண்ணிக்கை | 110,456 | 144,354 |
| (ஆ) | மாணவர் ஒருவருக்கான மூலதனச் செலவினம் | மூலதனச் செல வினம் - மாணவர்களின் எண்ணிக்கை | 2,894 | 227,115 ** |
| **மொத்தம்** | | | **113,350** | **371,469** |

** 2017 ஆம் ஆண்டில் நிறுவனத்துக்காக காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டமையினால் மூலதன செலவுகளை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

## 31. 2013 - 2017 வரை நிறுவனத்தின் நிதி நிலைமை

| வருடம் | அரசாங்க உதவி மீண்டுவரும் A | 102- அரசாங்க உதவி மூலதனம் B | நிறுவனத்தின் ஈட்டுகை C | மொத்த மீண்டுவரும் வருமானம் D (A+C) | மொத்த மீண்டுவரும் செலவு E | மீண்டுவரும் நிதி பணிகளின் பெறுபேறு F (D-F) |
|---|---|---|---|---|---|---|
| 2013 | 11,417,000 | 2,550,000 | 26,474,565 | 37,891,565 | 41,359,197 | (3,467,632) |
| 2014 | 24,150,000 | 2,000,000 | 30,109,778 | 54,259,778 | 55,041,448 | (781,671) |
| 2015 | 12,000,000 | 2,750,000 | 45,303,098 | 57,303,098 | 64,274,134 | (6,971,036) |
| 2016 | 23,400,000 | 6,400,000 | 61,874,729 | 85,274,729 | 87,260,061 | (1,985,332) |
| 2017 | 33,592,000 | 152,934,464 | 68,429,350 | 102,021,350 | 99,603,937 | 2,417,412 |

**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் வருமான ஈட்டுகை மற்றும் உரிய நிதி நிலைமை அறிக்கை**

**கடந்த சில வருடங்களினுள் நிறுவனத்தின் அந்நியசெலாவணி வருமானம்**

இது தொடர்பிலான தரவுகள் பின்வருமாறாகும்.

| **வருடம்** | **அந்நியசெலாவணி வருமானம் (ஐ.அ.டொ.)** |
|---|---|
| 2012 | 137,555 |
| 2013 | 117,730 |
| 2014 | 132,300 |
| 2015 | 193,748 |
| 2016 | 216,235 |
| 2017 | 258,405 |

**கடந்த சில வருடங்களினுள் நிறுவனத்தின் அந்நியசெலாவணி வருமானம்**

**படம்**

கடந்த சில வருடங்களினுள் நிறுவனத்தின்  வருமானம்

| வருடம் | வருமானம் (ரூபா) |
|---|---|
| 2013 | 23,806,012 |
| 2014 | 27,638,270 |
| 2015 | 39,923,995 |
| 2016 | 55,986,950 |
| 2017 | 62,800,964 |

கடந்த சில வருடங்களினுள் நிறுவனத்தின் வருமானம்

படம்

**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்திற்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்த நன்கொடை**

இந்த நிறுவனத்தின் மீண்டுவரும் செலவினம் சார்பில் வருடாந்தம் கிடைக்கப்பெற்ற நன்கொடை பின்வருமாறாகும்.

| **வருடம்** | **மீண்டுவரும் நன்கொடை(ரூபா)** |
|---|---|
| 2013 | 11,417,000 |
| 2014 | 24,150,000 |
| 2015 | 12,000,000 |
| 2016 | 23,400,000 |
| 2017 | 33,592,000 |

**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்திற்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்த நன்கொடை**

**படம்**

**நிறுவனத்தின் நிதிசார் முன்னேற்றம்**

கடந்த சில வருடங்களினுள் நிறுவனத்தின் நிதி கூற்றுகளுக்கு அமைவாக மிகை /  குறைவு

| **வருடம்** | **மிகை /  குறைவு  (ரூபா)** |
|---|---|
| 2013 | (3,467,632) |
| 2014 | (781,671) |
| 2015 | (6,971,036) |
| 2016 | (1,985,332) |
| 2017 | 2,417,412 |

**படம்**

## 32. அறிக்கைக்குரிய பிற தகவல்கள்

| |
|---|
| 01. இறுதிக் கணக்குகள் - 2017<br><br>02. களனி பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமான பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று தொடர்பில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையும் பதிலும். |

பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்

(களனி பல்கலைக்கழகம்)

# இறுதிக் கணக்குகள்
# 2017

113, துட்டுகெமுனு வீதி, கொஹுவெல

## 2017 ஆம் ஆண்டின் நிதி நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை

**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம் - களனி பல்கலைக்கழகம்**

**அறிக்கையிடும் நிறுவனம்**

களனி பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமொன்றான பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க பாளி, பௌத்த கல்வி கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

2017 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகள் சார்பில் 38 நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுள்ளன.

2017 ஆம் ஆண்டில் கிடைத்த கொடைகளின் அளவு பின்வருமாறாகும்.

| | | |
|---|---|---|
| மீண்டுவரும் ஒதுக்கீடு | - | ரூபா 33,592,000.00 |
| மூலதனக் ஒதுக்கீடு 102 | - | ரூபா 152,934,464.00 |

அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடைகள் உட்பட குறித்த ஆண்டின் மொத்த மீண்டுவரும் வருமானமானது 102,021,350/- ரூபாவாவதோடு, மீண்டுவரும் செலவானது 99,603,937/- ரூபாவாகும். இதற்கமைவாக, மீண்டுவரும் நிதி நடவடிக்கைகளின் பெறுபேறு 2,417,412/- ரூபாவாகும்.

**பேராசிரியர் கொட்டபிட்டியே ராகுல தேரோ**
**பணிப்பாளர்**

**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்**
**களனி பல்கலைக்கழகம்**

**2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான நிதி நிலைமைக் கூற்று**

| சொத்துக்கள் | குறிப்பு | 2017<br>ரூபா | ரூபா | 2016<br>ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|
| **அசையா சொத்துக்கள் (அட்டவணை H)** | | | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் | 01 | 163,199,504 | | 10,691,163 | |
| முதலீடு | 02 | 18,864,650 | | 12,241,876 | |
| பிற நிதி சொத்துக்கள் | 03 | 1,163,549 | | 1,031,858 | |
| | | | **183,227,702** | | **23,964,897** |
| **அசையும் சொத்துக்கள்** | | | | | |
| களஞ்சிய முற்பணக் கணக்கு | 04 | 509,553 | | 534,370 | |
| இருப்பு கணக்கு (புத்தக வெளியீடு) | 05 | 1,397,829 | | 1,611,049 | |
| பல்வேறுபட்ட கடன்பட்டோர் | 06 | 51,860 | | 589,946 | |
| பதவியணியினர் கடன்களும் முற்பணமும் | 07 | 3,113,277 | | 3,125,867 | |
| நானாவித முற்பணம் | 08 | 1,000 | | 3,509 | |
| முற்கொடுப்பனவு | 09 | 732,192 | | 55,471 | |
| பணம் மற்றும் பணம் சார்ந்தவை | 10 | 36,780,693 | | 27,351,484 | |
| பிற | 11 | 65,000 | **42,651,402** | 65,000 | **33,336,696** |
| **முழு சொத்துக்கள்** | | | **225,879,105** | | **57,301,593** |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வைப்புக்கள் | 12 | 1,789,089 | | 896,689 | |
| சிறு கடன் கொடுத்தோர் | 13 | 6,699 | | 3,934 | |
| அட்டுறுச் செலவுகள் | 14 | 4,302,081 | | 6,567,548 | |
| பிற | 15 | 11,460,052 | | 3,748,194 | |
| | | | **17,557,921** | | **11,216,365** |
| **நடைமுறைசாரா பொறுப்புக்கள்** | | | | | |
| செலவுசெய்யப்பட்ட மூலதனக் கொடை | 16 | 168,742,953 | | 15,598,252 | |
| செலவுசெய்யப்படாத மூலதனக் கொடை | 17 | 2,703,670 | | 6,598,635 | |
| | | | **171,446,623** | | **22,196,887** |
| **வரைறுக்கப்பட்ட நிதி** | | | | | |
| விசேட நிதி | 18 | 8,058,453 | | 7,368,961 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆராய்ச்சி நிதி | 19 | 1,170,353 | | 1,120,032 | |
| பரிசுகளும் கொடைகளும் | 20 | 7,823,826 | | 8,460,187 | |
| பிற | 21 | 19,803,458 | | 11,302,526 | |
| பணிக்கொடை ஒதுக்குகை | 22 | 9,456,536 | | 10,085,124 | |
| | | | **46,312,626** | | **38,336,831** |
| **மொத்த பொறுப்புகள்** | | | **235,317,169** | | **71,750,082** |
| **தேறிய பொறுப்புக்கள்** | | | **(9,438,064)** | | **(14,448,489)** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | | | |
| **மூலதனப் பெறுகைகள்** | | | | | |
| மீள் பெறுமதியிடல் ஒதுக்குகை கணக்கு | | 1,846,372 | | 1,846,372 | |
| நிறுவனத்தின் பொது ஒதுக்குகை | 23 | (11,284,436) | **(9,438,064)** | (16,294,861) | **(14,448,490)** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | **(9,438,064)** | | **(14,448,490)** |

நிறுவனத்தின் முகாமைத்துவ சபையானது இந்த சபைக்காகவும் அதன் சார்பிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிக்கூற்று பற்றிய பொறுப்பினை வகிக்கின்றது.

இந்த நிதிக்கூற்றானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கும் நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கியுள்ளது.

**(வண.பேராசிரியர் கொட்டடபிட்டியே ராகுல தேரோ)**
**பணிப்பாளர்**
**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்**

**முகாமைத்துவ சபையின் உறுப்பினர்**
**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்**

**திருமதி ஏ.பி.எஸ்.எம்.தொலகே**
**சிரேட்ட உதவி நிதி பொறுப்பாளர்**
**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்**

**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்**

**களனி பல்கலைக்கழகம்**

**2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான நிதி நடவடிக்கை பற்றிய கூற்று**

| | குறிப்பு | 2017 ரூபா | ரூபா | 2016 ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | | |
| மீண்டுவரும் செலவினத்திற்கான அரசாங்கத்தின் கொடை | 25 | 33,592,000 | | 23,400,000 | |
| **பிற வருமானம்** | | | | | |
| கடன் வட்டி | | 130,881 | | 138,381 | |
| பல்வேறுபட்ட பெறுகைகள் | 24 | 3,129,836 | | 2,063,788 | |
| பதிவுக் கட்டணம் | | 880,500 | | 798,000 | |
| பாடநெறிக் கட்டணம் | | 39,481,072 | | 35,193,386 | |
| பரீட்சைக் கட்டணம் | | 348,000 | | 306,500 | |
| நூலகக் கட்டணம் | | 587,000 | | 533,000 | |
| நூல் விற்பனை | | 22,950 | | 14,872 | |
| நூலகத் தண்டப்பணம் | | 2,639 | | 5,999 | |
| பிற கருத்திட்ட வருமானம் | | 18,228,087 | | 16,933,025 | |
| இலதாக்கல் | 25 | 5,355,215 | | 5,580,693 | |
| பிறதொழிற்பாட்டு வருமானம் | 25 | 273,171 | | 307,086 | |
| **மொத்த வருமானம்** | | | **102,021,350** | | **85,274,729** |
| **செலவு** | | | | | |
| தனிப்பட்ட ஊதியங்கள் - கல்விசார் | 25 | 24,582,181 | | 16,452,206 | |
| தனிப்பட்ட ஊதியங்கள் - கல்விசாரா | 25 | 24,327,924 | | 24,177,186 | |
| பிரயாணச் செலவுகள் | | 1,352,953 | | 1,184,729 | |
| வழங்கல்கள் | | 2,207,817 | | 1,280,809 | |
| பராமரிப்பு செலவு | | 1,168,338 | | 1,138,048 | |
| ஒப்பந்த சேவைகள் | | 16,830,032 | | 15,123,678 | |
| பெறுமானத்தேய்வு மற்றும் இலதாக்கல் செலவு | 25 | 4,319,898 | | 4,996,061 | |
| பிற செலவுகள் | 25 | 24,814,796 | | 22,907,344 | |
| **செலவு மொத்தம்** | | | **99,603,93** | | **87,260,06** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | **7** | | **1** |
| தொழிற்பாட்டு சேமிப்பு / குறைவு | | | **2,417,412** | | **(1,985,332)** |
| **நிதிசார் செலவு** | | | | | |
| சொத்துக்கள், உபகரணங்கள் விற்பனையின் மூலம் கிடைத்த வருமானம் | | | - | | - |
| தொழிற்பாடல்லாத மொத்த வருமானம் (செலவு) | | | **(2,417,412)** | | **(1,985,332)** |
| சேமிப்பு / (குறைவு) விசேட பொருட்கள் | | | - | | - |
| விசேட பொருட்கள் | | | - | | - |
| காலப்பகுதிக்குள் சேமிப்பு / (குறைவு) | | | **(2,417,412)** | | **(1,985,332)** |

நிறுவனத்தின் முகாமைத்துவ சபையானது இந்த சபைக்காகவும் அதன் சார்பிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிக்கூற்று பற்றிய பொறுப்பினை வகிக்கின்றது.

இந்த நிதிக்கூற்றானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கும் நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கியுள்ளது.

**(வண.பேராசிரியர் கொட்டப்பிட்டியே ராகுல தேரோ)**
**பணிப்பாளர்**
**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்**

முகாமைத்துவ சபையின் உறுப்பினர்
**பாளி, பௌத்த கல்வி**
**பட்டப்பின்படிப்பு நிறுவனம்**

**திருமதிஏ.பி.எஸ்.எம்.தொலகே**
**சிரேட்ட உதவி நிதி பொறுப்பாளர்**
**பாளி, பௌத்த கல்வி**
**பட்டப்பின்படிப்பு நிறுவனம்**

**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்**
**களனி பல்கலைக்கழகம்**

**2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான நிதி ஓட்டக் கூற்று**

| | **2017**<br>ரூபா | ரூபா | **2016**<br>ரூபா | ரூபா |
|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் கிடைத்த நிதி ஓட்டம்** | | | | |
| வருடத்திற்கான மிகை (குறைவு) | | 2,417,412 | | (6,971,036) |
| **நிதி தழும்பலின்பால் பாதிக்கும் விடயங்கள் சார்பிலான சீராக்கல்கள்** | | | | |
| பணிக்கொடை | | 1,983,474 | | 1,146.237 |
| பெறுமானத்தேய்வு | | 4,149,599 | | 4,244,470 |
| ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | | 170,299 | | 86,408 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | | (273,171) | | (1,134,633) |
| இலதாக்கல் | | (5,355,215<br>) | | (4,244,471) |
| | | 3,092,398 | | (6,873,025) |
| கடந்த காலப்பகுதிகளுக்கான விடயங்கள் | | - | | - |
| தொழிற்படு மூலதன விடயங்களின் மாற்றங்களுக்கு முன்னைய தொழிற்பாட்டு மிகை | | **3,092,398** | | **(6,873,025)** |
| **தொழிற்படுமூலதன விடயங்களின் மாற்றங்கள்** | | | | |
| களஞ்சிய முற்பணம், ஆராய்ச்சி, வெளியீடு இருப்பு (அதிகரிப்பு / குறைவு) | 238,038 | | 23,371 | |
| பல்வேறுபட்ட கடன்பட்டோர்(அதிகரிப்பு / குறைவு) | 538,086 | | (109,326) | |
| பதவியணியினர் முற்பணம்(அதிகரிப்பு / குறைவு) | 12,590 | | 92,760 | |
| சேவை வழங்குகை முற்பணம்(அதிகரிப்பு/குறைவு) | 2,509 | | 45,875 | |
| எதிர்காலக் கொடுப்பனவு(அதிகரிப்பு / குறைவு) | (676,721) | | 726,691 | |
| பிற வைப்புக்கள் (அதிகரிப்பு / குறைவு) | - | | - | |
| முதலீட்டு வரவேண்டியவைகள் மீதான வட்டி (அதிகரிப்பு / குறைவு) | - | | - | |
| வைப்புகளும் கடனாளிகளும்(அதிகரிப்பு / குறைவு) | 895,165 | | 361,904 | |
| அட்டுறுச் செலவு, பிற பொறுப்புக்கள் (அதிகரிப்பு / குறைவு) | 5,446,391 | 6,456,058 | 336,994 | 1,478,269 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலம் கிடைத்த தேறிய பெறுமதி | | **9,548,456** | | **(5,394,756)** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலம் கிடைத்த நிதி ஓட்டம்** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | (156,364,437) | | (3,370,723) | |
| பிற முதலீடுகள் | (6,754,465) | | (3,787,302) | |
| **முதலீட்டு செயற்பாடுகளில் இடப்பட்ட தேறிய நிதி** | | **(163,118,901)** | | **(7,158,025)** |
| **நிதி செயற்பாடுகளின் மூலம் கிடைத்த நிதி ஓட்டம்** | | | | |
| மூலதன செலவுகளுக்கான அரசாங்கத்தின் கொடை | 152,934,464 | | 2,750,000 | |
| பரிசுகளும் கொடைகளும் | 795,696 | | 1,112,293 | |
| பிற நிதியங்கள் | 9,269,514 | | 3,869,790 | |
| நிதி செயற்பாடுகளின் மூலம் பிறப்பிக்கப்பட்ட நிதி | | **162,999,654** | | **7,732,082** |
| பணம் மற்றும் பணம் சார்ந்த விடயங்களின் தேறிய அதிகரிப்பு | | **9,429,209** | | **(4,820,698)** |
| **வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் பணம் சார்ந்தவை தொடர்பிலான நிலுவை** | | **27,351,484** | | **8,012,202** |
| **வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் பணம் சார்ந்தவை விடயங்களின் நிலுவை (குறிப்பு 1)** | | **36,780,693** | | **3,191,503** |
| | | | | |
| **குறிப்பு 1** | | **2017 ரூ.** | | **2016 ரூ.** |
| வங்கி நிலுவை | | 36,780,693 | | 27,351,484 |
| பிற வங்கி நிலுவை | | - | | - |
| | | **36,780,693** | | **27,351,484** |

**பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்**

**களனி பல்கலைக்கழகம்**

**2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான தேறிய சொத்துக்களின் தழும்பல்**

| | பொது சேர்மம் (ரூபா) | மீள் மதிப் பிடல் (ரூபா) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| 2015-01-01 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | **(7,411,260)** | **798,276** | **(6,612,984)** |
| நன்கொடை விடயங்களின் பெறுமதி மாற்றம் 2015 ஆம் ஆண்டில் மிகை / (குறைவு) | (6,671,036) | 1,048,095 | (5,922,941) |
| 2015-12-31 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | (14,382,297) | 1,846,372 | (12,535,925) |
| | | | |
| 2016-01-01 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | **(14,382,296)** | **1,846,372** | (12,535,924) |
| கிம் நன்கொடையின் நிலுவையை ஒதுக்கத்திற்கு மாற்றுதல் | 4,529 | - | 4,529 |
| பௌத்த ஆயுர்வேத நிலுவையை ஒதுக்கத்திற்கு மாற்றுதல் களஞ்சிய முற்பணக் கணக்கின் சீராக்கல் | 50,000 | - | 50,000 |
| 2016 ஆம் ஆண்டில் மிகை / (குறைவு) | 18,238 | - | 18,238 |
| | (1,985,332) | - | (1,985,332) |
| 2016-12-31 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | (16,294,861) | 1,846,372 | (14,448,490) |
| 2017-12-31 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | (16,294,861) | 1,846,372 | (14,448,490) |
| வரவேற்பு மேசைக்கான பெறுமானத் தேய்வினை அதிகரிக்கும் சேர்மத்திற்கு மாற்றப்பட்டமை | 37,888 | - | 37,888 |
| அலுவலக உபகரணங்கள் கணக்கில் "Budry" தராசு சார்பிலான சீராக்கல் | 13,500 | - | 13,500 |
| 2014 காசோலை மாற்றங்களின் போதான வித்தியாசம் | 35 | - | 35 |
| "Budry" தராசுக்கான பெறுமானத் தேய்வினை அதிகரிக்கும் சேர்மத்திற்கு மாற்றப்பட்டமை | 13,500 | - | 13,500 |
| பணிக்கொடை நிதி ஏற்பாடு ஒதுக்குகையை குறைப்பதற்கான குழுவுக்கு மாற்றப்பட்டமை | 2,612,062 | - | 2,612,062 |
| வரவேற்பு மேசைக்கான பெறுமானத் தேய்வு இலதாக்கல் | (37,888) | - | (37,888) |
| "Budry" தராசுக்கான பெறுமானத் தேய்வு இலதாக்கல் | (13,500) | | (13,500) |
| இல்லாதாக்கப்பட்ட சம்பள காசோலைகளுக்கான சீராக்கல் | (32,211) | - | (32,211) |
| களஞ்சிய முற்பணக் கணக்கிற்கான சீராக்கல்கள் | (423) | - | (423) |
| 2017 ஆம் ஆண்டில் மிகை / (குறைவு) | 2,417,412 | - | 2,417,412 |
| 2017-12-31 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | **(11,284,486)** | **1,846,372** | **(9,438,114)** |

## நிதி கூற்று தொடர்பிலான குறிப்பு

### 1. பொது கொள்கைகள்

### 1.1 பிரதான நோக்கங்களும் செயற்பாடுகளின் தன்மையும்

இந்த நிறுவனத்தினால் பாளி, பௌத்த கல்வி துறைகள் தொடர்பில் பட்டப்பின் படிப்பு நிலையிலான மாணவர்களுக்கு கற்பித்தல், பயிற்சியளித்தல், ஆராய்ச்சி செய்தல் போன்ற பணிகளைச் செய்வதோடு, பட்டத்தையும் டிப்ளோமாவையும் வழங்குகின்றது.

### 1.2 கணக்கிடல் மூலதர்மங்கள்

நிதி நிலைமை பற்றிய கூற்று, நிதி செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றம் பற்றிய கூற்று, நிதி ஓட்டக் கூற்று மற்றும் கணக்கிடல் குறிப்புகள் முதலியனவற்றை நிதிக் கூற்றானது கொண்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2011 ஆம் இலக்கமுடைய நிதி சுற்றறிக்கையின் மூலம் தொடர்புபடுத்தப்பட்ட இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள அரசாங்கத்துறை சார்ந்த கணக்கிடல் தரங்களுக்கு அமைவாக மேற்போந்த கணக்குக் கூற்றானது தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2. விசேட கணக்கிடல் கொள்கை

### 2.1 சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள்

தளபாடங்கள், கருவிகள், அலுவலக உபகரணங்கள், கற்பித்தல் உபகரணங்கள், நூலக நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் உட்பட ஏனைய சொத்துக்களும் அரசாங்கத்தின் கொடைகளின் மூலம் பெற்றுக் கொண்டுள்ள பொருட்கள், நிறுவனத்தினால் பிறப்பிக்கப்பட்ட பணம் மற்றும் நன்கொடைகள்.

### (அ) இனங்காணும் அடிப்படை

சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன இனங்காண முடியுமாவது இந்த வகைகள் சார்ந்த எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு கிடைக்கப் பெற்றாலும் இந்த பொருட்களின் செலவு கூடியவரை கணக்கிட கூடியதான சந்தர்ப்பம் இருக்குமாயின் மாத்திரமாகும்.

ஐந்து (05) வருடங்களிலிருந்து பத்து (10) வருடங்கள் வரையிலான காலப்பகுதி வரை செல்லும் ஐந்து (05) வகுப்பீடுகளினுள் சொத்தொன்றின் ஆயுட் காலம் தங்கியுள்ளது.

**(ஆ) பெறுமானத் தேய்வு**

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பயன்பாட்டுக்காக எடுத்துக் கொள்ளப்படும் திகதியிலிருந்து அவற்றின் ஆயுட் காலத்திற்கு அமைவாக நேரடி முறையின் கீழ் நிதி செயலாற்றுகை அறிக்கையில் பெறுமானத் தேய்வானது இனங்காணப்படும் .

சொத்துக்களின் மதிப்பீட்டிற்காக ஆயுட்காலம் பின்வருமாறாகும்

| **சொத்துக்கள்** | **மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம்** |
|---|---|
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10 வருடங்கள் |
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| நூலகப் புத்தகங்களும் பருவகால சஞ்சிகைகளும் | 05 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் |

**(இ) அலுவலக மனையிடமும் அதன் பராமரிப்பும்**

தற்போது இந்த நிறுவனம் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டடமொன்றில் தாபிப்பிக்கப்பட்டுள்ளதோடு, 25,000/- ரூபாவுக்கு மேற்படாத சிறிய பழுதுபார்த்தல்கள் சார்பில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு நிறுவனத்தினால் உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தர்ப்பத்திற்கேற்ப பராமரிப்பு செலவுகள் வருமான மற்றும் செலவு கணக்கிற்கு சேர்க்கப்படும் .

**(ஈ) நிலையான சொத்துக்களின் பதிவேடு**

திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடானது முற்றாக்கப்பட்டுள்ளது. இறுதிக் கணக்குடன் நிலையான சொத்துக்களை ஒப்பிடுதலானது 2015-12-31 ஆம் திகதியன்றுக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, விசேட குழுவினால் இந்தப் பணியானது கண்காணிக்கப்பட்டு, அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டது. 2017-02-27 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட 47 ஆம் கணக்காய்வு குழுவுக்கு அந்தக் குழுவின் அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டதோடு, கணக்காய்வுக் குழுவின் ஆலோசனையின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் .

**3. நடைமுறைச் சொத்துக்கள்**

ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களாக வகுப்பீடு செய்யப்படுவது நிதி கூற்று திகதியிலிருந்து ஒரு (01) வருட காலத்திற்குள் மீள அறவிடக்கூடிய சொத்துக்களாகும்.

### 3.1 பொருள் பதிவேடும் கையிருப்பும்

(அ) முதலாவதாக பெற்று முதலாவதாக வழங்கப்படும் அடிப்படையில் பொருள் பதிவேட்டில் செலவு நிர்ணயிக்கப்படுவதோடு, இந்த பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் போது ஏற்கவேண்டி நேரிடும் செலவுகள் மற்றும் அவற்றின் நிலைமை உட்பட இடத்திற்கு கொண்டு செல்வதற்காக செலவுகளும் உள்ளடங்கும்.

(ஆ) நீண்டகாலமாக (2005 ஆம் ஆண்டிற்கு முன்னர்) களஞ்சிய முற்பணக் கணக்கிற்கும் இருப்பு நிலுவைக்கும் இடையில் வித்தியாசம் காணப்பட்டதோடு, 2016 ஆம் ஆண்டில் இது ஒப்பிடப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் அங்கீகாரத்துடனும் (45.14), முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடனும் (355.07) பிழைகளை சீர்செய்வதற்கான ஜேர்னல் குறிப்புகள் அனுப்பப்பட்டுளள்ன.

### 4. நடைமுறைப் பொறுப்புகள்

நிதி நிலைமை வெளிப்படுத்தலில் நடைமுறைப் பொறுப்புகளாக வகுப்பீடு செய்யப்பட்டுள்ள பொறுப்பாவது நிதிக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு (01) வருட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புக்களாகும். நிதிக் கூற்று தயாரிக்கப்படும் போது சகல பொறுப்புகளும் கணக்கிடப்பட்டன.

### 5. பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கீடுகள்

சகல ஊழியர்களும் குறித்த ஆண்டிலேயே ஓய்வு பெறுவார்களாயின் செலுத்தப்பட வேண்டிய தொகை தொடர்பில் முன்னதாகவே நிர்ணயித்து 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு அமைவாக ஓய்வு பெறுபவர்களுக்கு செலுத்தப்படக்கூடிய பணிக்கொடை சார்பில் நிதிக் கூற்றில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

### 6. வட்டி வருமானம்

ஒரு காலப்பகுதிக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட அத்துடன் கிடைக்கவுள்ள வட்டி வருமானம் வெளிவாரி வரையறுக்கப்பட்ட நன்கொடை மீது ஈட்டப்படும் முதலீட்டு வருமானம் தவிர, கிடைத்த வருமானமாக நிதிக் கூற்றில் பதிவு செய்யப்படும். அத்தகைய நிதியங்களின் மீது நிலுவை வட்டி வருமானமானது குறித்த ஆண்டினுள் நேரடி நிதி அதிகரிப்பாக பதிவு செய்யப்படும்.

### 7. செலவுகளை இனங் காணுதல்

கல்வி மற்றும் ஆராய்ச்சி சம்பந்தமான சகல செலவுகளும் திரட்டிய செலவுகளாக பதிவு செய்யப்படுவதோடு நிலையான தன்மையிலான சொத்துக்களை சுவீகரிக்கும் போது அல்லது விருத்தி செய்யும் போது எழும் சகல செலவுகளும் மூலதனச் செலவுகளாக கருதப்படும்.

**8. அந்நிய செலாவணி**

அந்நிய செலாவணி ஊடாக செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கள் வைப்புச் செய்யப்படும் திகதியன்றில் நிலவும் செலாவணி விகிதாசாரத்திற்கு அமைவாக பதிவு செய்யப்படும்.

9. ஏற்புடைய அங்கீகாரங்களுடன் மேலதிக செலவு தலைப்புகளிலிருந்து குறைவான செலவு தலைப்புகளுக்கு செலவுகளானவை மாற்றப்படும் போது ஒருசில சந்தர்ப்பங்களில் பின்வரும் வரவுசெலவுத்திட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

I. எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் (3.02) என்பதிலிருந்து பிரயாணச் செலவுகள் (உள்ளூர்) (2.01) என்பதற்கு 150,000/- ரூபா மாற்றப்பட்டமை;

II. எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் (3.02) என்பதிலிருந்து எழுது கருவி வகைகளும் அலுவலக தேவைகளும் (3.01) என்பதற்கு 220,000/- ரூபா மாற்றப்பட்டமை;

III. எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் (3.02) என்பதிலிருந்து வீத வரி மற்றும் உள்ளூர் வரி (5.09) என்பதற்கு 30,000/- ரூபா மாற்றப்பட்டமை;

IV. பாதுகாப்பு சேவைகள் (5.05) என்பதிலிருந்து தொலைத்தொடர்புகள் (5.02) என்பதற்கு 300,000/- ரூபா மாற்றப்பட்டமை;

V. பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் பிரயாண செலவு ஏற்பாடிலிருந்து (6.01) விசேட சேவைகள் தொழில் மற்றும் பிற கட்டணங்கள் (6.03) என்பதற்கு 400,000/- ரூபா மாற்றப்பட்டமை;

VI. கல்வி ஆராய்ச்சி மற்றும் வெளியீடு (6.05) என்பதிலிருந்து களியாட்ட செலவுகள் (6.09) என்பதற்கு 50,000/- ரூபா மாற்றப்பட்டமை;

VII. சிறு திருத்த வேலைகள், பராமரிப்பு மற்றும் வாகனம் (4.01) 100,000/- ரூபாவும் சிறு திருத்த வேலைகள், பராமரிப்பு மற்றும் பிற பணிகள் (4.05) என்பதிலிருந்து 135,000/- ரூபாவும் இயந்திரசாதனங்கள் கருவிகள், உபகரணங்கள் சிறு திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு (4.02) என்பதற்கு மாற்றப்பட்டமை;

VIII. அஞ்சல் கட்டணம் (5.03) என்பதிலிருந்து மின்சாரம் (5.04) என்பதற்கு 200,000/- ரூபா மாற்றப்பட்டமை;

IX. நீர் (5.06) என்பதிலிருந்து குத்தகை மற்றும் வாடகை (5.08) என்பதற்கு 450,000/- ரூபா மாற்றப்பட்டமை; அத்துடன்

X. ஆராய்ச்சிகளைப் பலப்படுத்துதல் (102) என்பதிலிருந்து மாணவர் நலனோம்பல், ஊழியர் நலனோம்பல், மாணவர் சபை மற்றும் சமூக கலந்துரையாடல் (6.17) என்பதற்கு 1,205,615.67/- ரூபா மாற்றப்பட்டமை.

## 10. தனிப்பட்ட வேதனாதிகள்

தனிப்பட்ட வேதனாதிகளுக்குரிய முக்கிய வெற்றிடங்கள் சம்பந்தமாக பின்வருவன இனங்காணப்பட்டன:

1. 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நான்கு (04) சிரேட்ட விரிவுரையாளர்கள் பேராசிரியர்களாக நியமனம் பெற்றமை.

2. கல்விசாரா பதவியணியைச் சேர்ந்த ஐவர் (05) 2017 ஆம் ஆண்டில் கல்விசார் பதவியணிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டமை.

3. 2017 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படும் போது மதிப்பிடப்பட்ட வருமானம் சார்பில் தற்போது உடன்பாடு காணப்பட்டுள்ள வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்க வேண்டிய தேவை எழுந்தமையினால் தற்போதுள்ள பதவியணியினர் மாத்திரம் இதில் உள்வாங்கப்பட்டமை (வெற்றிடம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை).

4. 2017 ஆம் ஆண்டிலிருந்து கல்விசாரா பதவியினருக்கு 15 சதவீத சம்பள அதிகரிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டமை.

ஆயினும், நிறுவனத்தின் ஊடாக பிறப்பிக்கப்பட்ட வருமானத்திலிருந்து 31 சதவீதம் மொத்த தனிப்பட்ட வேதனாதிகள் சார்பில் தழுவப்பட்டுள்ளது.

## 11. நிதி ஓட்டக் கூற்று

நிதி ஓட்டக் கூற்று நேரடியல்லாத வழிமுறையினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**


මගේ අංකය / எனது இல. / My No. : පවබඩ/ඩ/ඩ/පිබඩ/1/17
ඔබේ අංකය / உமது இல. / Your No. :
දිනය / திகதி / Date : 2018 සැප්තැම්බර් 19 දින

අධ්‍යක්ෂ,

පාලි හා බෞද්ධ අධ්‍යයන පශ්චාත් උපාධි ආයතනය

**කැළණිය විශ්වවිද්‍යාලයට අනුබද්ධිත පාලි හා බෞද්ධ අධ්‍යයන පශ්චාත් උපාධි ආයතනයේ 2017 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනතේ 108(1) උපවගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2018 අගෝස්තු 09 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඊ.ඒ.ජී.ආනන්ද
නියෝජ්‍ය විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට.

| පිටපත් : | | | |
|---|---|---|---|
| 1. | උපකුලපති | - | කැලණිය විශ්වවිද්‍යාලය |
| 2. | සභාපති | - | විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව |
| 3. | ලේකම් | - | උසස් අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය |
| 4. | ලේකම් | - | මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය |




අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. எச்ஈடீ/ஈ/பீஜபீபீ/1/17

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2018 ஆகஸ்ட் 09

பணிப்பாளர்,
பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவகம்.

**களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவக சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மாணிப்பதற்கு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலும் காசுப் பாய்ச்சலும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டுப் புலமைப்பரிசில் நிதிய முதலீட்டின் மூலம் மீளாய்வாண்டில் பெறப்பட்ட வட்டி வருமானமாகிய ரூபா 83,654 வருமானக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தது.

(ஆ) வங்கி மீதிகளது உறுதிப்படுத்தலின் பிரகாரம், 06 நிலையான வைப்புகளது பெறுமதி ரூபா 19,147,006 ஆகும். எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அம் முதலீட்டுப் பெறுமதி ரூபா 18,915,063 ஆகியமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புகளது பெறுமதி ரூபா 231,943 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 1997 முதல் 2006 வரை நிறுவகத்திற்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 1,116,040 கிரயமுடைய சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தன. எனினும், அதற்குரிய நிதியத்தை கிரமமான அடிப்படையில் பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) கிரயத்தை இனங்கண்டு கொள்ள முடியாத 159 சொத்துக்களது பெறுமதி ரூபா 581,800 ஆக 2016 ஆம் ஆண்டின்போது மீள மதிப்பீடு செய்யப்பட்டிருந்தபோதும், அப்பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டின்போது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களது கிரயமும் திரண்ட தேய்மானமும் கணக்கிலிருந்து நீக்கப்படாது விற்பனை விலையாகிய ரூபா 15,450 தொங்கற் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 தொங்கற் கணக்கு

2011 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து வரும் தொங்கற் கணக்கின் செலவு மீதி ரூபா 5,120 ஆகியபோதும், இம் மீதியை இனங்கண்டு அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம், 03 வகைச் சொத்துக்களது பெறுமதி ரூபா 43,953,197 ஆகியபோதும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 47,774,866 ஆகியமையால் விளக்கமளிக்கப்படாத வேறுபாடாக ரூபா 3,821,669 அவதானிக்கப்பட்டது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1979 டிசெம்பர் 24 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவக சட்டவாக்கத்தின் 11(5) ஆம் பிரிவு | லீவு பெறாது தொடர்ச்சியாக 03 கூட்டங்களுக்குச் சமுகமளிக்காதுவிட்டால் பதவி விலகியதாகக் கருதப்படலாமெனினும், பீடத்தில் நியமனம் பெற்றிருந்த களனி பல்கலைக்கழக பாளி கற்கைப்பிரிவின் தலைவர் மீளாய்வாண்டில் கூட்டம் எதிலும் சமுகமளிக்காதிருந்ததுடன், கலாசாரக் கல்விப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தியவாறு சமுகமளித்திருந்த பீட மன்றத்தின் அங்கத்தவர் மற்றும் பல்கலைக்கழகங்கள் மானியக் குழுவின் பிரதிநிதியாகப் பங்குபற்றிய பீட மன்ற அங்கத்தவர் ஆகியோர் 04 கூட்டத் தொடர்களுக்குச் சமுகமளிக்காதபோதும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணி சம்பந்தமாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 2,417,412 ஆகும். இதற்கெதிரான

முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,985,332 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 4,402,744 அதிகரிப்பு தென்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 12,343,876 அதிகரித்தபோதும், அரசாங்கத்தின் மீண்டுவரும் மானியம் ரூபா 10,192,000 மற்றும் ஏனைய வருமானம் ரூபா 6,554,621 என அதிகரிப்புக்குள்ளாகியமை மேற்படி நிதிப் பெறுபேற்று அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்யைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 முதல் 2016 வரை நிதிப் பெறுபேற்றில் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தபோதும், 2017 ஆம் ஆண்டில் மிகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் மீண்டும் சீராக்கல் செய்யப்பட்டதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 19,584,159 ஆகவிருந்த பங்களிப்பு 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 51,327,517 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

நிறுவகம் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்திருந்தபோதும், 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் உட்சேர்க்க வேண்டிய நிறுவக அமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி என்பன தொடர்பான விபரம், வரவு, செலவுத் திட்டம் நடவடிக்கைத் திட்டம், மற்றும் கட்டு நிதித் திட்டம் ஆகியவற்கை அத்திட்டத்தில் சேர்த்திருக்கவில்லை.

#### 4.1.2 நடவடிக்கைகளும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டுப் பிக்கு மாணாக்கர்கள் பெருமளவில் பதிவு செய்யும் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த மாணாக்கரது எண்ணிக்கை 296 ஆகியபோதும், மீளாய்வாண்டில் பதிவு

செய்யப்பட்டிருந்த மாணாக்கரின் எண்ணிக்கை 93 ஆகவிருந்ததுடன் 68 சதவீத குறைவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கல்விசார் மற்றும் கல்விசாராப் பதவியணி உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு ஆராய்ச்சிகளுக்கான படியாக ரூபா 2,226,043 மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவர்கள் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கும் அவற்றினதும் செயல் முன்னேற்றம் ஆராய்ச்சிக்குக் குழுவால் பரிசீலிக்கப்பட்டதற்குமான சான்று அவதானிக்கப்படாததுடன், நிறைவு செய்த ஆராய்ச்சிகளது இறுதி அறிக்கைகளும் சமர்ப்பிக்கபட்டவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டோலையின் பிரகாரம் ஆராய்ச்சிகள் மற்றும் புத்தக வெளியீடுகள் என்பவற்றினது மீதி 3,947 ஆகியபோதும், நேரடியாகக் கையிருப்பு சரி, பிழை பார்க்கப்பட்டபோது மீதி 3,605 ஆகவிருந்ததால் ரூபா 123,188 பெறுமதியான 342 புத்தகங்கள் குறைவாகக் காணப்பட்டபோதும், அக்குறைவை இனங்காண்பதில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 4.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் வங்கிக் கணக்கொன்றில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,653,361 மீதி இருந்ததுடன், ஆண்டு முழுவதும் இக் கணக்கில் சராசரியாக ரூபா 5,367,521 மீதி நிலவியதால் நிறுவகத்தின் நிதியம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேவையை இனங்காணாது புத்தகங்களையும் பிரசுரங்களையும் விற்பனைக்கென அச்சிட்டமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏறக்குறைய 10 ஆண்டுகள் பழமை வாய்ந்த மெதுவாக நகரும் 3258 புத்தகங்களது மீதி நிலவியது. இவற்றுள் ஆண்டின்போது விற்பனை செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாக வழங்கப்பட்ட புத்தகங்களது எண்ணிக்கை 347 மாத்திரமே.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல நோக்கங்களையும் இலக்கையும் அடைதல்

2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 “நிகழ்ச்சி நிரலின் ” பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயலாற்ற வேண்டுமாயினும், பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டபின் படிப்பு நிறுவகம் மீளாய்வாண்டின் பொருட்டு தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்படலாம் என்பதை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 வரவு, செலவு திட்டக்கட்டுபாடு

2017 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம், வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான பெறுமதிகளுக்கிடையே 58 முதல் 100 சதவீத வேறுபாடுகள் நிலவியதால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை மற்றும் 25 ஆண்டுகள் பழமை வாய்ந்த பயன்படுத்த முடியாத வாகனத்தைத் துரிதமாகச் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு | கையிருப்புக் குறைவுகளையும் மிகைகளையும் சீராக்கல் செய்து கணக்கைத் திருத்தஞ் செய்யாமை. |
| (இ) வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு | தேவைக்கதிகமாக செலவினத்தை மதிப்பீடு செய்தல் |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்/எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்,
இலக்கம் 306/72, பொல்துாவ வீதி,
பத்தரமுல்லை.

ஐயா,

**களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்பலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

மேற்போந்த விடயம் சம்பந்தமாக கணக்காய்வாளர் அதிபதியினால் அனுப்பப்பட்டிருந்த 2018-08-09 ஆம் திகதியிடப்பட்டதும் எச்ஈடீ/ஈ/பிஜபிபீ/1/17 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான வரைவு அறிக்கைக்கு அமைவாக உரிய பதில்களை இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

2.2.1 **கணக்கீட்டு குறைபாடுகள்**

(அ) அவதானிப்புரைகள் சரியானது

உரிய சேமிப்புக் கணக்கானது இற்றைப்படுத்தப்பட்டுள்ளதோடு, கணக்கில் குறிப்பு வைத்தலானது செய்யப்படாதுள்ளது. 2018 ஆம் ஆண்டில் குறிப்பு வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கின் மீதான கணக்காய்வில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு கணக்கு இலக்கம் 086-6001-00032808 / 086-6001-00032826 / 086-6001-00001208 என்பவற்றின் நிலுவை உறுதிப்படுத்தும் சான்றிதழுக்கு மேலதிகமாக திரண்ட வட்டியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்கு இலக்கம் 086-6001-00032817 / 086-6001-000110304 / 086-6001-000002680 தொடர்பில் மேற்போந்தவாறு நடவடிக்கை எடுத்திருந்தாலும் கணக்கிடும் போது பிழையான நிலுவை உறுதிப்படுத்தல் பத்திரத்தை பயன்படுத்தியதன் காரணமாக நிலையான வைப்பு பெறுமதி குறைவாக இருப்பதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

(இ) அவதானிப்புரைகள் சரியானது

வரைவு அறிக்கைக்கான பதில்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் 2018 ஆம் ஆண்டில் செம்மைப்படுத்தல் குறிப்பானது வைக்கப்பட்டிருந்தது. உரிய பேரேட்டின் குறிப்பின் பிரதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இந்த குறிப்பிடப்படாத சொத்துக்கள் பெறுமதி கணக்குப் புத்தகங்களின் சீராக்கல் செய்வதற்கு கணக்குக் கிளையிலுள்ள தகவல்களுடன் இனங்காண முடியாமையினால் கணக்கிடுவது கடினமாயுள்ளது.

(உ.) நிறுவனத்தில் இதுவரை காலமும் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று இல்லாமை காரணமாக வருடாந்தம் ஏலம் விடப்பட்ட சொத்துக்கள் விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த தொகை எதிர்பாரா கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்கள் பற்றிய தகவல்கள் உரிய கணக்கு குறிப்புகள் தொடர்பில் (செலவு மற்றும் திரண்ட மீதி) போதுமானதாக இல்லாததன் காரணமாக கணக்குகளிலிருந்து நீக்க முடியாமற்போயுள்ளது.

எதிர்காலத்தில் இத்தகைய நிலைமையொன்று எழாதவாறு சொத்துக்கள் பராமரிப்பு, அகற்றல் மற்றும் ஏலம் போன்றவற்றுக்கான பணிகளை செய்யுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அமைச்சுக்களின் அங்கீகாரத்தின் கீழ் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சொத்துக்கள் இறுதி கணக்குகளுடன் ஒப்பிடப்படும் சந்தர்ப்பத்தில் இந்த நிலுவையையும் ஒப்பிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

### 2.2.2 எதிர்பாரா கணக்கு

நிறுவனத்தில் இதுவரை காலமும் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று இல்லாமை காரணமாக 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சேதமடைந்த பொருட்களின் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களுக்கான தொகையிலிருந்து பொருட் பதிவேட்டிலிலுள்ள பொருட்கள் மற்றும் தகவல்கள் எண்பிக்கக்கூடிய நிலையான சொத்துக்கள் கணக்குகளுடன் ஒப்பிடப்பட்டதன் பின்னர் மீதித் தொகையானது இவ்வாறு எதிர்பாரா கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்கள் பற்றிய தகவல்கள் உரிய கணக்கு குறிப்புகள் தொடர்பில் (செலவு மற்றும் திரண்ட மீதி) போதுமானதாக இல்லாததன் காரணமாக கணக்குகளிலிருந்து நீக்க முடியாமற்போயுள்ளது.

### 2.2.3 விளக்கம் அளிக்கப்படாத வேறுபாடுகள்

நிறுவனத்தின் ஆரம்பம் முதலே 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று இருக்கவில்லை. இதற்கமைவாக, 2016 ஆம் ஆண்டிலிருந்து நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டதுடன், இறுதி கணக்குகளுடன் ஒப்பிட்டு 3,821,669/- ரூபா வித்தியாசம் கண்டறியப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்கு கூற்றுக்களுடன் ஒப்பிட்டு இனங்காணப்பட்ட சொத்துக்களானவை பதிவு செய்யப்படாமை, சொத்து வகைகளுக்கிடையில் மாற்றங்கள் போன்ற பிழைகள் 2017-12-31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டு சார்பில் தயாரிக்கப்பட்ட இறுதி கணக்கில் சீர்செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, இந்த ஒப்பீட்டின்படி உரிய பதிவுகளை இற்றைப்படுத்தி தொடர்ந்தும் நிலவும் வித்தியாசத்தினை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2017-12-14 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட கணக்காய்வு குழுவின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**2.3 சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு அமைவாக செயற்படாமை.**

(அ) எடுத்துக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக துரிதமாக சீர்ப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டுமென்பதோடு, பீட சபை உறுப்பினர் ஒருவர் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) கணனி கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பிலான அனுபவமுள்ள பதவியணி உறுப்பினர்கள் நிறுவனத்தின் வரையறுக்கப்பட்ட பணியாட்டொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. பதவியணியை மீளமைத்து தேவையான பணியாட்டொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்து இந்த சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி பெறுபேறு

அவதானிப்புரைகள் சரியானதாகும்

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கி 2018 ஆம் ஆண்டு சார்பில் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

(அ) கலைமாணி பாடநெறிக்கு நுழைவதற்கான தகைமைகள் 2018 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டன. இதன் காரணமாக பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியில் சேரவிருந்த பெரும்பாலான மாணவர்கள் நேரடியாக கலைமாணி பாடநெறியில் சேர்வதற்கு வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. இதற்கமைவாக, எண்ணிக்கையானது மாற்றமடைந்தது.

(ஆ) பலைக்கலைக்கழக முறைமையினுள் இது தொடர்பில் பின்பற்றப்படும் முறைக்கு நிறுவனமும் செயலாற்றுதல் வேண்டும்.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் மீது நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

**4.3 நீக்கப்பட்ட மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

பொது திறைசேரியிலிருந்து நிறுவனத்திற்கு மீண்டுவரும் மற்றும் மூலதனமாக கிடைக்கப்பெறும் நிதி இந்த வங்கி கணக்கிற்கு அனுப்பப்படுகின்றது. அத்துடன் நிறுவனத்தில் சராசரியாக மாதாந்தம் சுமார் 7 மில்லியன் ரூபா செலவாகின்றது. கணக்கிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி சுமார் ஒரு மில்லியன் ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. நிதி நியதி 387 இற்கு அமைவாக அரசாங்க கணக்குகளுக்கான காசோலை எழுதும் போது கணக்கில் நிலுவை போதுமான அளவு இருத்தல் கட்டாயமானதாதல் வேண்டும்.

**5. நிலையான அபிவிருத்தி**

**5.1 நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

(அ) மேற்போந்த நோக்கங்களை அடைவதற்கு ஆரம்பமாக பரீட்சைப் பெறுபேறுகள், வெற்றிடங்கள், அறிவித்தல்கள் உட்பட வேறு தகவல்கள் அபிவிருத்தி செய்யப்பட்ட நிறுவனத்தின் இணையதளத்தில் வெளியிடுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**6. கணக்களிப்பு பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

வரவுசெலவுத்திட்ட அட்டவணையை ஆகக்கூடிய விதத்தில் பயனுள்ளதாக முகாமித்து நடாத்திச் செல்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகள்**

(அ) நிலையான சொத்துக்களின் கட்டுப்பாடு - நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது

(ஆ) களஞ்சிய கட்டுப்பாடு - எதிர்காலத்தில் உரிய சீராக்கல்கள் செய்யப்படும்.

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு - இந்த நிலைமையை தவிர்ப்பதற்கு வரவுசெலவுத் திட்ட எதிர்வுகூறல் சந்தர்ப்பங்களில் வரவுசெலவுத்திட்ட கட்டுப்பாடு தொடர்பில் உரிய துறைகளுக்கு கடுமையாக அறியச்செய்விப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

மேற்போந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக வழங்கியுள்ள தெளிவுபடுத்தல்கள் தொடர்பில் நான் தனிப்பட்ட வகையில் பொறுப்புக் கூறுகின்றேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

இங்ஙனம்,

**கலாநிதி கொட்டபிட்டியே ராகுல தேரோ**
பணிப்பாளர்

பிரதிகள்:
01. துணைவேந்தர், களனி பல்கலைக்கழகம்
02. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
03. செயலாளர், உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
04. செயலாளர், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

